வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 09.12.2024 திங்கட்கிழமை இதழ் : 343 பக்கங்கள் : 12




# இலங்கை மனித உரிமை விவகாரத்தில் கரிசனையுடன் செயலாற்றிவருகிறோம்

## பிரிட்டன் அரசு அறிவிப்பு

லண்டன், டிசெம்பர் 09

இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வ தையும், நல்லிணக்கத் தைக் கட்டியெழுப்புவதையும் முன்னிறுத்தி பிரிட்டன் தொடர்ந்தும் கரிசனை யுடன் செயலாற்றிவருவதாகத் தெரிவித்திருக்கும் அந்நாட்டு இந்தோ - பசுபிக் விவகார அமைச்சர் கத்ரின் வெஸ்ட், எதிர்வரும் காலத்தில் தடைவிதிக்கப்படக்கூடிய பதவிகள் குறித்த யூகங்களை வெளியிடுவ தானது, அத்தடைகளால் ஏற்படக் கூடிய தாக்கங்களைக் குறைத்து விடும் என சுட்டிக்காட்டியிருக்கிறார்.

பிரிட்டன் பொதுத் தேர்தலில் தொழிற்கட்சியின் வெற்றியை அடுத்து, புதிய பிரதமராகத் தெரிவான கெய்ர் ஸ்டார்மருக்கு வாழ்த்து தெரிவித்து பிரித் தானிய தமிழர் பேரவை கடந்த ஜூலை மாதம் 5ஆம் திகதி கடித மொன்றை அனுப்பிவைத்திருந்தது. அக்கடிதத்தில், "எதிர்வரும் செப்ரெம்பர்மாத (நடை பெற்று முடிந்த) ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான முன் னைய தீர்மானம் மேலும் இரு வருடங் களுக்கு நீடிக்கப்படுவதைத் தடுப்பதற் கும், இலங் கையை சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறையை நோக்கி நகர்த்திச் செல்வதற்கும் அவசிய மான நடவடிக்கைகளை

11



## 16ஆம் திகதி அநுர டில்லிக்கு பயணம்!

கொழும்பு, டிசெ. 09

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க எதிர்வரும் 16 ஆம் திகதி டில்லிக்கு பய ணம் மேற்கொள்ளவுள்ளார் என தெரிய வருகின்றது.

16 மற்றும் 17 ஆம் திகதிகளில் இந்தி யாவில் முக்கியத்துவமிக்க சந்திப்புகளில் ஜனாதிபதி ஈடுபடவுள்ளார் என வும் தெரியவருகின்றது.

இந்திய பிரதமர் மற்றும்

11

## அத்தியாவசியப் பொருள்கள் 25 வீதம்வரை விலை குறைப்பு

கொழும்பு, டிசெ. 09

லங்கா சதொச விற்பனை நிலையங்களின் ஊடாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை 25 சத வீதம் குறைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள் வோம் என்று வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

நேர்காணல் ஒன்றின் போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பண்டிகைக் காலங்களில் பொருட்களின் விலைகள் அதிகரிப்பது பொதுவாக சந்தையினுள் காணப் படும் ஒரு நிலையாகும். எனவே அதனைக்

11

# தேசிய இனப்பிரச்னை விடயத்தை மிகவிரைவாகத் தீர்த்து வையுங்கள்

## அநுரவிடம் கோரிக்கை வைத்த தமிழரசு

மட்டக்களப்பு, டிசெ. 09

தேசிய இனப்பிரச்னை விட யத்தை விரைவாக தீர்த்து வைப்பதற் குரிய நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு இலங்கைத் தமிழ ரசுக் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எட்டு பேரும் ஜனாதிபதி அநுர குமார திசநாயக் காவிடம் கோரிக்கையொன்றை முன்வைத் துள்ளனர்.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பின் போது பாராளு மன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த வாரம் புதிய பாராளு மன்றத்தின் முதலாவது அமர்வு நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து எமது நாடாளுமன்ற குழுத்தலைவர் சிறீ தரன் தலைமையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் எட்டு பேரும் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவுடனான

11

## கிழக்கு கடற்கரைக்கு சமாந்தரமாக நகரும் காற்றழுத்தத் தாழ்வு நிலை!

யாழ்ப்பாணம், டிசெ. 09

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் தோற்றம் பெற்ற காற்றழுத்த தாழ்வு நிலை மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து தற்போது பாணமையிலிருந்து தென் கிழக்கு திசையில் 548 கி.மீ. தொலைவில் காணப் படுகின்றது.

இது அடுத்து வரும் நாட்களில் மேற்கு வட மேற்கு திசை நோக்கி நகர்ந்து நாளை இலங்கையின் கிழக்கு கடற்கரைக்கு சமாந்தரமாக (கிழக்கு மாகாணத்திலி ருந்து 230 கி.மீ. தொலைவிலேயே அதன் மையம் காணப்படும்) வடக்கு வடமேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது என யாழ். பல்கலைக் கழக புவியியல்துறைத் தலைவர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

11

## கம்பி வலையினால் மூடப்பட்ட கிணற்றில் பெண்ணின் சடலம்!

### பருத்தித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 09

பருத்தித்திறை பொலிஸ் பிரிவில் கற்கோவளம் வராத் துப்பளை பகுதியில் பெண் ஒருவரது சடலம் கம்பி வலை யால் மூடப்பட்ட பொதுக் கிணற்றில் இருந்து மீட்கப் பட்டுள்ளது.

தனது தாயரை நேற்று முன்தினம் பிற்பகலிலி ருந்து காணவில்லை என அவரது குடும்பத்தினர் தேடிச்சென்ற வேளை குறித்த கம்பி வலையால் மூடிய கிணற்றடிப் பகு தியில் தொலைபேசி சத்தம் ஒலித்த நிலையில் அக் கிணற்றை அவரது மகன் எட்டிப் பார்த்த வேளை கம்பி வலையால் மூடிய கிணற்றிற்குள் சடலம்

11

## ஆவா குழுவின் தலைவர் பிரசன்னாவை பிரான்ஸுக்கு நாடு கடத்த கனடா முடிவு

பாரிஸ், டிசெ. 09

ஆவா குழுவின் தலைவர் என சந்தேகிக்கப்பட்டு கன டாவில் கைது செய்யப்பட்டுள்ள பிரசன்னா நல்லலிங் கத்தை பிரான்ஸுக்கு நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் மற்றும் கனடாவின் அறிவுறுத்தலுக்கமைய அவருக்கு எதிராக சர்வதேச பொலிஸ் பிடியாணை பிறப் பித்திருந்தது.

அவர் 2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடம் பெற்ற கொலை சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளுக்காக பிரான்ஸுக்கு மாற்றப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11

## அரிசி ஆலைகளின் தகவல்கள் திரட்டுகின்றது அநுரவின் அரசு!

கொழும்பு, டிசெ. 09

அரிசி ஆலை உரிமையாளர்கள் உற்பத்தி செய்யும் மொத்த அரிசியின் அளவு, கையிருப்பின் அளவு மற்றும் சந்தைக்கு வெளியிடப்பட்ட அரிசியின் அளவு உள்ளிட்ட அறிக்கைகளை பெறுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, நுகர்வோர் விவகார அதிகார சபையினரால் இந்த அறிக்கைகள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

பொலனறுவை பகுதியில் உள்ள அரிசி ஆலைகள் நேற்று விசேட சோதனைக்கு

11

## ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிகளுக்காக இலங்கை ஹெலி!

கொழும்பு, டிசெ. 09

ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிகளுக்காக இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டர் படை யின் 108 பேர் கொண்ட குழு ஒன்று மத்திய ஆபிரிக்க குடியரசிற்கு புறப்பட்டுச் சென்றுள்ளது.

இலங்கை விமானப்படை ஹெலிகொப்டர் படையின் உறுப்பினர்கள் 2014 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுக ளின் அமைதி காக்கும் பணிகளில் பங்களிப்பு செய்து வரு கின்றனர்.

இக்குழுவினர் ஹெலிகொப்டர் படைப்பிரிவின் போக்குவரத்து, விஐபி போக்குவரத்து, உணவு

11

## மார்ச் மாத இறுதியில் உள்ளூராட்சி தேர்தல்!

கொழும்பு, டிசெ. 09

2025 மார்ச் இறுதியில் அல்லது ஏப்ரல் முதல் வாரத் தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது என தெரியவருகின் றது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு புதிதாக வேட்பு மனு கோரப்படவுள்ள நிலையில், அதற்கான சட் டம் அடுத்த மாதம் நிறைவேற்றப்படவுள்ளது.

அதேவேளை, உள்ளூராட்சித் தேர்தலுக்கு புதிதாக வேட்புமனு கோரப்படுவதால் குட்டி தேர்தலை நடத்து வதற்காக ஏற்கனவே செலவளிக்கப் பட்ட சுமார் 72 கோடி ரூபா வீண் செலவு என

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பை உருவாக்குவதில் தேசிய மக்கள் சக்தி உறுதியாக உள்ளது!

*பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர*

கொழும்பு, டிசெ. 09

நாட்டுக்கு புதிய அரசியலமைப்பு தேவை என்பதில் தேசிய மக்கள் சக்தி உறுதியாக இருப்பதோடு அந்த அரசியலமைப்பில் இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளடக்கப்பட்டு சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடப்படும் என்று வெளி விவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2015-2019 அரசாங்கத்தின் காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்புக்கான செயற்பாடுகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையில் இருந்து தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை மையப்படுத்திய புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம். அதனை நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் குறிப்பிட்டுள்ளோம்.

இருப்பினும், அந்த இடைக்கால அறிக்கையை விடவும் முற்போக்கான விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டுமாக இருந்தால் நாம் அதுபற்றி கலந்துரையாடுவதற்கு தயாராகவே உள்ளோம்.

எவ்வாறாக இருந்தாலும் 22 திருத்தங்கள் அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நாட்டுக்கு புதிய அரசியலமைப்பு தேவை என்ற விடயத்தில் நாம் உறுதியாக உள்ளோம்.

இனப்பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் எமது அமைப்பின் கொள்கைகளை மையப்படுத்திய விடயத்தினை முன்வைப்போம். அதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருதவில்லை.

எமது முன்மொழிவுகள் தீர்வினை அடைவதற்கான ஒரு பயணப்பாதையாகும். சிலதரப்பினர் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து அந்த வழியால் தீர்வினை அடையலாம் என்ற குறிப்பிடுகின்றார்கள்.

நாட்டில் அனைத்துப் பிரஜைகளும் சம அந்தஸ்துடன் சாந்தியும் சமாதானமுமாக வாழ வேண்டும். வளங்கள் சமமாக பகிரப்பட வேண்டும் என்பது தான் இலக்காக உள்ளது. அதனை அனைவரினதும் பங்களிப்புடன் அடைந்து கொள்வது தான் நோக்கமாக உள்ளது.

இதேநேரம், புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுகின்ற போது 13ஆவது திருத்தச்சட்டம் மட்டுமல்ல முதலாவது திருத்தத்திலிருந்து 22ஆவது திருத்தம் வரையில் அகற்றப்பட்டு அவற்றின் உள்ளடக்கங்களைக் கொண்டதொரு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

அதேநேரம் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலத்தில் மாகாண சபை முறைமை நீக்கப்படாது. நாட்டில் யுத்தமொன்று இடம்பெற்றது.

பல தசாப்தங்களாக இனங்களுக்கு இடையிலான பிரச்சினை நீடித்துக்கொண்டு தான் உள்ளது. அதற்கான தீர்வு வழங்கப்படும் வரையில் மக்களிடத்திலிருந்து வெளிவருகின்ற கோசங்கள் ஓயப்போவதில்லை.

எனவே எமது நோக்கம், அனைவரினதும் இணக்கத்துடன் ஏற்படுத்தப்படுகின்ற தீர்வானது மக்களின் அங்கீகாரத்துக்காக விடப்படும். அதாவது, புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுகின்ற நிலையில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவோம்.

அதேநேரம், தற்போது ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கம் இனவாதம், மதவாதத்தை பேசவில்லை. அவ்வாறு பேசுவதற்கு இடமளிக்கவும் இல்லை. வழக்கமாக ஆளும் தரப்பு தான் அவ்விதமான மனோநிலையில் செயற்படும்.

ஆனால் இம்முறை அவ்விதமான நிலைமை காணப்படவில்லை. ஆகவே இந்த மாற்றமானது, புதிய அரசியலமைப்பினை உருவாக்கும் செயல்பாடுகளுக்கு சவால்களை அளிக்காது என்றே கருதுகின்றேன். நிச்சயமாக மக்கள் எதிர்பார்க்கின்ற முறைமை மாற்றமொன்று ஏற்படும் - என்றார். (அ)

# ரூ. 55 மில்லியன் மோசடி மருத்துவர் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ. 09

தனியார் நிறுவனமொன்றின் பணிப்பாளராக கடமையாற்றிய மருத்துவர் ஒருவர் 55 மில்லியன் ரூபாய் நிதி மோசடி செய்த குற்றம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோனஹேன, வேபட பிரதேசத்தைச் சேர்ந்த மருத்துவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொது முறைப்பாடு பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# யானை மர்ம மரணம்

அநுராதபுரம், டிசெ. 09

அநுராதபுரம், மின்னேரியா, ரொட்டவெவ வனப்பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் யானை ஒன்று உயிரிழந்தது.

25 வயது மதிக்கத்தக்க 08 அடி உயரமுடைய யானையே இவ்வாறு உயிரிழந்தது.

இந்த யானையின் தந்தங்கள் 04 அடி 04 அங்குலம் உயரமுடையதாகும்.

இந்த யானை சுமார் 25 வருடங்களாக மின்னேரியா மற்றும் கவுடுல்ல ஆகிய தேசிய பூங்காக்களில் பராமரிக்கப்பட்டு வந்தது.

யானை உயிரிழந்ததற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (எ)

# மாணவர்கள் பயணித்த படகொன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலி!

கொழும்பு, டிசெ. 09

செல்லக்கதிர்காமம் இருபது ஏக்கர் வாவியில் மாணவர்கள் சிலர் பயணித்த படகொன்று மூழ்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் மாலை குறித்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் செல்லகதிர்காமம் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய ஒருவரென தெரியவந்துள்ளது.

ஐந்து மாணவர்கள் குறித்த படகில் பயணித்துள்ளதாகவும், படகு கவிழ்ந்ததை அடுத்து பிரதேச மக்களின் உதவியுடன் அவர்களை அனைவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதே ஒருவர் உயிரிழந்துள்ளார். (அ)

# மக்கள் தொகைக் கணக்கெடுப்பு; அச்சம் கொள்ளத் தேவையில்லை

கொழும்பு, டிசெ. 09

மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளுக்காக வீடுகளுக்கு வரும் கணக்கெடுப்பாளர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவதில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சனத்தொகை கணக்கெடுப்புக்கு வரும் அதிகாரிகளுக்கு சில வீடுகள் தகவல் வழங்காமல் இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி அனோஜா செனவிரத்ன இதனை வலியுறுத்தினார்.

எவ்வாறெனினும், தொகை மதிப்பு கணக்கெடுப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருடத்திற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவர திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி அனோஜா செனவிரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)

# மனித பாவனைக்கு உதவாத 58 மூடை கோதுமை மா மீட்பு!

கொழும்பு, டிசெ. 09

பதுளை மயிலகஸ்தென்ன பகுதியில் உள்ள களஞ்சிய சாலையில் பாவனைக்கு உதவாத 58 கோதுமை மா மூடைகளை பதுளை மாநகரசபையின் சுகாதார அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். அரசாங்கத்திற்கு சொந்தமான இந்த களஞ்சியசாலையை பண்டாரவளை பிரதேசத்தில் உள்ள வர்த்தகர் ஒருவர் வாடகை அடிப்படையில் பெற்று நடத்தி வருவதும் தெரியவந்துள்ளது.

கோதுமை மா கையிருப்பு சுகாதார அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் எலிகளினால் கோதுமை மா மூடைகள் சேதப்படுத்தப்பட்டு இருந்ததாகவும், அதில் எலிகளின் சிறுநீர் மற்றும் எச்சங்கள் இருந்ததாகவும் சோதனையை மேற்கொண்ட சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். சோதனையிடப்பட்ட களஞ்சிய சாலை தொடர்பான சட்ட நடவடிக்கைகளை பதுளை நீதவான் நீதிமன்றம் மேற்கொள்ளவுள்ளது.

# மின் கட்டணத்தை 6 மாதங்கள் திருத்தமின்றி பேண பரிந்துரை

கொழும்பு, டிசெ. 09

நடைமுறையில் உள்ள மின் கட்டணத்தை எதிர்வரும் ஆறு மாத காலத்துக்கு திருத்தம் செய்யாமல் அமுல்படுத்த வேண்டும் என இலங்கை மின்சார சபை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு பரிந்துரைத்துள்ளது.

மின்கட்டண திருத்தம் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைத்து மின்சார சபை இந்த பரிந்துரையை ஆணைக்குழுவிடம் முன்வைத்துள்ளது.

பொதுமக்களின் அபிப்ராயங்களை கோரியதன் பின்னர் இந்த பரிந்துரை தொடர்பில் உறுதியான தீர்மானத்தை அறிவிப்பதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மின்கட்டணத்தின் பிரகாரம் வருடத்தில் இரு தடவைகள் மின்கட்டணத்தை திருத்தம் செய்வதாக கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இருப்பினும் 2023 ஆம் ஆண்டு எரிபொருள் மற்றும் நிலக்கரி ஆகிய மூலப்பொருட்களின் விலையேற்றத்தை கருத்திற் கொண்டு வருடத்தில் நான்கு தடவைகள் மின்கட்டணத்தை திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

2024 ஆம் ஆண்டு மார்ச் 04 மற்றும் ஜூலை 15 ஆகிய திகதிகளில் மின்கட்டணத்தை திருத்தம் செய்ய இலங்கை மின்சார சபை ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது.

இந்த ஆண்டு முன்னெடுக்க வேண்டிய மூன்றாவது மின் கட்டண திருத்தம் தொடர்பான யோசனையை மின்சார சபை கடந்த ஆகஸ்ட் மாதம் நடுப்பகுதியில் பொதுப்பயன்பாடு ஆணைக்குழுவிடம் முன்வைத்திருந்தது.

மூன்றாவது மின்கட்டண திருத்தப் பரிந்துரையில் மின்கட்டணத்தை நூற்றுக்கு 6 சதவீதத்தால் குறைக்க மின்சார சபை உத்தேசித்திருந்தது.

இருப்பினும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இந்த யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. பரிந்துரைகளின் தரவுகளில் குளறுபடிகள் காணப்படுவதால் அவற்றை திருத்தி சரியான பரிந்துரைகளை முன்வைக்குமாறு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மின் சாரசபைக்கு அறிவுறுத்தியது.

இதற்கமைய மின்சார சபை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (2024.12.06) திருத்தப்பட்ட மின்கட்டண திருத்த யோசனையை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ளது.

புதிய திருத்தத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் முன்வைக்கப்பட்ட 6 சதவீத மின்கட்டண குறைப்பு இரத்து செய்யப்பட்டு, எதிர்வரும் ஆறு மாத காலத்துக்கு மின்கட்டணத்தை திருத்தம் செய்யாமல் தற்போதைய கட்டண திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்று மின்சார சபை பரிந்துரைத்துள்ளது.

2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மின்சார சபை 136 பில்லியன் முதல் 200 பில்லியன் ரூபா வரை மின்சார சபை இலாபமடைந்துள்ள நிலையில் ஒக்டோபர் மாதம் முன்வைத்த 6 சதவீத கட்டண குறைப்பை புதிய கட்டண திருத்தத்தில் இரத்து செய்துள்ளமை ஆச்சரியத்துக்குரியது.

மொத்த மின்னுற்பத்தியில் 56 சதவீதமளவில் நீர்மின்னுற்பத்தி ஊடாக மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு தேசிய மின்கட்டமைப்பில் இணைக்கப்படுகிறது. எரிபொருள் ஊடாக 5 சதவீதம் அளவில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
09.12.2024 திங்கட்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

## மாகாண சபை தேர்தலுக்கான கோரிக்கை

இலங்கை தமிழ் அரசு கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமென்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார். புதிய அரசியல் அமைப்பை கொண்டுவருவதற்கு முன்பதாக மாகாண சபையை முழுமையான அதிகாரங்களுடன் இயங்கச் செய்வது முக்கியமென்றும் அவர் தெரிவித்திருக்கின்றார். மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்னும் கோரிக்கை சரியான ஒன்றுதான்

ஆனால், இதனைக் கருத்தில் கொண்டு அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். ஆனால், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி இவ்வாறான கோரிக்கையை இதுவரையில் முன்வைக்கவில்லை - அந்தக் கட்சியைப் பொறுத்தவரையில் மாகாண சபை முறைமையை இல்லாதொழிப்பது ஒரு விடயமல்ல - அதற்கு பதிலாக தமிழ் மக்கள் பேரவை என்னும் செயலிழந்துபோன அமைப்பு ஒன்றினால் வரையப்பட்ட அரசியல் தீர்வு யோசனையை முன்வைத்து அரசாங்கத்துடன் பேசவேண்டுமென்று கூறுகின்றது.

ஓர் அமைப்பு செயலிழந்து போகின்றது என்றால், அதன் பின்னர் அதனால் முன்வைக்கப்பட்ட நிலைப்பாடுகளை இன்னொருவர் சுமந்து கொண்டு செல்ல முடியாது. தமிழ் மக்கள் மத்தியில் காலத்திற்கு காலம் பல அமைப்புகள் தோற்றம் பெற்றிருக்கின்றன - ஆனால் அவ்வாறான அமைப்புகளில் பெரும்பாலானவை குறுகிய காலத்திலேயே செயலிழந்து போயிருக்கின்றன. தவிர, தமிழ் மக்கள் பேரவையுடன் இலங்கை தமிழ் அரசு கட்சி இணைந்திருக்கவில்லை - அதேபோன்று கூட்டமைப்பில் அங்கம் வகித்த கட்சிகளில், சித்தார்த்தன் மட்டுமே பங்குகொண்டிருந்தார்.

இன்றைய சூழலில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதும், அதனை உச்சளவில் பயன்படுத்துவதுமே, தமிழர்களைப் பொறுத்தவரையில் உசிதமான அரசியல் நகர்வாக இருக்க முடியும். அரசாங்கம் மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்கும் முயற்சியில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு - ஆனால், ஒரு வேளை, புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டு வருவதில் அநுரகுமார திஸநாயக்க அரசாங்கத்தினால் வெற்றிபெற முடிந்தால், அதன் பின்னர் பதின் மூன்று என்னும் விடயம் தமிழர் அரசியலில் இருக்கப் போவதில்லை.

ஆனால், புதிய அரசியல் யாப்பில் தற்போதுள்ள பதின்மூன்றில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற விடயங்கள் அனைத்தும் மீளவும் உள்வாங்கப்படுமா என்பது பெரியதொரு கேள்வியாகும். வெட்டிக் குறைக்கப்படவே அதிக வாய்ப்புண்டு. அவ்வாறான சூழலில் பதின் மூன்றில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்களையும் உள்ளடக்கி, அதே வேளை, அதனை விடவும் இன்னும் அதிக அதிகாரங்களை உள்ளடக்குமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து வெற்றிபெறும் ஆற்றல் தமிழ் கட்சிகளிடம் இருக்கின்றதா?

தங்களின் ஆற்றல் தொடர்பில் பொது வெளிகளில் உரையாடுவதற்கு தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போர் தயாரா? ஒன்றை இல்லாமலாக்குவது மிகவும் இலகுவானது. ஆனால், அதனை விடவும் சிறப்பான ஒன்றைப் பெற்றுக் கொடுக்கும் வல்லமை தமிழ் கட்சிகளிடம் இருக்க வேண்டும். தமிழ் கட்சிகளின் தற்போதைய நிலைமையை அனைவரும் நன்கறிவர்.

# கற்கோவளம் இராணுவ முகாமிலிருந்து படையினர் உடன் வெளியேற வேண்டும்

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ்ப்பாணம், பருத்தித்துறை - கற்கோவளம் பகுதியில் தனியார் காணியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினரை உடன் வெளியேறு ணமாறு, இராணுவத் தலைமையகத் தால் உத்தரவிடப்பட்ட போதிலும், இன்னமும் இரா ணுவத்தினர் வெளியேற வில்லை என்று மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அமைச்சரவை கடந்த மாதம் 18ஆம் திகதி பொறுப்பேற்றிருந்தது.

அமைச்சரவை பொறுப்பேற்று சில மணிநேரங்களில், பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் தனியார் காணியில் அமைந்துள்ள இராணுவ முகாமிலிருந்து 14 நாட்களுக்குள் படையினர் வெளியேற வேண்டும் என்ற உத்தரவு இராணுவத் தலைமையகத்தால் பிறப்பிக்கப்பட்டது.

எனினும், 14 நாட்களுக்கு மேலாகியும், இந்த முகாம் இராணுவத்தினரின் பிடியில் இருந்து விடுவிக்கப்படவில்லை.

தொடர்ந்தும் அந்தத் தனியார் காணியும், இராணுவ முகாமும் படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

எனவே, வாக்குறுதி வழங்கி மக்களை ஏமாற்றாது, அங்கிருந்து படையினர் உடனடியாக வெளியேற வேண்டும் என்று பொது மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

குறித்த இராணுவ முகாமை அகற்றுமாறும், இராணுவத்தை வெளியேறுமாறும் மக்களும், தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளும் கடந்த காலங்களில் பல கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்தியிருந்தனர்.

குறித்த காணியை ஆக்கிரமிக்கும் வகையில் நில அளவீடு செய்வதற்குப் பல தடவைகள் முயற்சிகள் செய்யப்பட்டிருந்த போதிலும் மக்களின் எதிர்ப்பால் அந்தப் பணிகள் தடுக்கப்பட்டன. (எ)

# இந்திய மீனவர்கள் 8 பேர் நேற்று நெடுந்தீவு கடற்பரப்பில் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து நேற்று அதிகாலை அத்துமீறிக் கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 8 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது இரண்டு மீன்பிடி படகுகளும் கைப்பற்றப்பட்டதாகக் கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

கைதான மீனவர்கள் காங்கேசன்துறை துறைமுகத்தை நோக்கி அழைத்து வரப்படுவதாக அவர் குறிப்பிட்டார். இதனையடுத்து குறித்த 8 இந்திய மீனவர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மயிலிட்டி கடற்றொழில் பரிசோதகர் காரியாலயத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் கடற்படை பேச்சாளர் தெரிவித்தார். (எ)

# மழையால் முள்ளிவாய்க்காலில் வெளிப்பட்ட வெடிபொருட்கள்

முல்லைத்தீவு, டிசெ. 09

அண்மையில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் நிலத்தில் புதைக்கப்பட்ட வெடிபொருட்கள்

சில முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் வெளியில் தென்பட்டுள்ளன.

இந்த வெடிபொருட்கள் வெளிப்பட்டமை தொடர்பில்

முல்லைத்தீவு பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தொலைபேசி முறைப்பாட்டுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் குறித்த பகுதியை அடையாளப்படுத்தியுள்ளனர்.



இந்த வெடிபொருட்கள் விடுதலைப்புலிகள் காலத்தில் நிலத்தில் புதைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக வெள்ளம் நிலத்தை அரித்து பாய்ந்துள்ளது. இதனால் இந்த வெடிபொருட்கள் வெளிப்பட்டுள்ளன. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர் - 09 திங்கள்கிழமை
குரோதி வருடம் - கார்த்திகை 24
நல்ல நேரம் :6.00-7.30
ராகு காலம் :7.30-9.00
திதி : நவமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். பயணங்கள் சிறப்பாக அமையும். புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும்.

**இடபம்**
உணர்வுகளை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். அந்தஸ்து உயரும் நாள்.

**மிதுனம்**
கணவன்- மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதியவர்களின் நட்பால் உற்சாகம் அடை வீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். செயல்படும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். குடும்பத்தில் எல்லாவற்றையும் இழுத்துபோட்டு பார்க்க வேண்டி இருக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
கடினமான காரியங்களை எளிதாக முடிப்பீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வேற்று மதத்தவர் உதவுவார்.

**கன்னி**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி சாதிப்பீர்கள். பிள்ளைகளால் புகழ் கௌரவம் உயரும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். அமோகமான நாள்.

**துலாம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். நட்பு வட்டம் விரியும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**விருட்சிகம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு. புது வேலை அமையும்.

**தனுசு**
குடும்பத்தினருடன் கலந்து ஆலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார்.

**மகரம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டாகும். அழகும் இளமையும் கூடும்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. பிள்ளைகளை அவர்கள் போக்கில் விட்டுப் பிடியுங்கள்.

**மீனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள் நண்பர்கள் உதவி கேட்டு தொந்தரவு தருவார்கள். வாகனம் பழுதாகும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டு வீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

# வவுனியா பண்பாட்டுப் பெருவிழா

வவுனியா, டிசெ. 09

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட செயலகமும் வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்திய வவுனியா பண்பாட்டுப் பெருவிழா வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் தி. தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் வவுனியா அரசாங்க அதிபர் பி. ஏ. சரத் சந்திர பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இதன்போது, பல கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றதோடு வவுனியம் விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.




# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய தூதரகத்தால் நிவாரண உதவிகள்

மன்னார், டிசெ. 09

வடக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா நிவாரண உதவிகளை வழங்கியுள்ளது.

வடக்கு மாகாண மக்கள் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் இடம்பெயர்ந்தும் துன்பப்பட்டும் இருக்கும் நிலையில், அவர்களுக்கு நிவாரண உதவி வழங்க இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் முன்வந்தது. இந்த நிலையில் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், துணைத் தூதரக அதிகாரிகளால் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

மன்னார் பேசாலை மற்றும் வெள்ளாங்குளம், முல்லைத் தீவு துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு ஆகிய பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 2,100 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உதவிகள் வழங்கப்பட்டன. நிவாரண தொகுப்புகளில் பாய் மற்றும் போர்வை போன்ற பொருட்கள் அடங்கியிருந்தன. இது இந்த கடினமான காலகட்டத்தில் அந்தக் குடும்பங்களுக்கு மிக முக்கியமான ஆதரவை வழங்கியிருந்தது. (எ)






பேராசிரியர் க. கைலாசபதியின் 42ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு மல்லாகத்திலுள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை பணிமனையில் நடைபெற்றது.

# யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்கள் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ்ப்பாணத்தில் நாளை 10ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை விசேட டெங்கு ஒழிப்பு செயல்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவிக்கையில்,"யாழ்ப்பாணத்தில் மழைக்குப் பின்னரான காலப்பகுதியில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது.

இதனால் யாழ். மாநகர சபை ஆணையாளர், நகர மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர்கள், பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள், கிராம மட்ட உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக பொருத்தமான பொறிமுறையூடாக நுளம்பு பெருகாது தடுப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

குறிப்பாக காணிகளில் காணப்படும் வெற்றுக்கலன்களைச் சேகரித்து உரிய வகையில் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சகல பிரதேச செயலாளர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

நாளை 10 ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரையான காலபகுதியில் இந்தச் செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்தி அதன் முன்னேற்ற அறிக்கையை 16 ஆம் திகதி அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்"- என்றார். (எ)

# உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், டிசெ. 09

கோண்டாவில் மேற்கு நந்தாவில் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக களுக்கு கோண்டாவில் மாதர் சங்க முன்னாள் தலைவியும் விவாக பதிவாளருமான திருமதி. வ. சோமசூரிய சிங்கத்தால் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (எ-05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வாரத்தில் நாட்டுக்கு வரவுள்ளது இறக்குமதி அரிசி!

கொழும்பு, டிசெ. 09
இறக்குமதி செய்யப்படும் அரிசி அடுத்த வாரம் இலங்கைக்கு கிடைக்கும் என அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவற்றில் பெரும்பாலான தொகை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளதுடன், அரிசி இருப்புகளை சுமந்து வரும் கப்பல்கள் அடுத்த வாரம் நாட்டை வந்தடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை நுகர்வோருக்கு உடனடியாக வழங்குவதற்காக துறைமுகத்திற்கு வரும் கப்பல்களில் உள்ள அரிசி 04 மணித்தியாலங்களுக்குள் விடுவிக்கப்படும் என சுங்கத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமும் ஊடகப் பேச்சாளருமான சிவலி அருக்கொட கூறியுள்ளார்.

தற்போது உருவாகியுள்ள அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வாக அதிகபட்சமாக 70,000 மெட்ரிக் டன்களுக்கு உட்பட்டு அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் அண்மையில் தீர்மானத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# நுவரெலியா டிப்போ கொலை, மூவர் பொலிஸாரினால் கைது!

கொழும்பு, டிசெ. 09
நுவரெலியாவில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போவில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை கொலை செய்து, ஒரு மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான நபர்கள் 34, 41 மற்றும் 55 வயதுடைய பதுளை, ரெந்தபொல மற்றும் மஹவ பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் டிப்போவில் காசாளராகவும், சாரதியாகவும் பணிபுரிந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் 85 வயதான பாதுகாப்புப் உத்தியோகத்தரை கூரிய ஆயுதத்தினால் தாக்கி கொலை செய்ததாகவும், டிப்போவில் இருந்த 1,052,167 ரூபா பணத்தை திருடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கைதான சந்தேகநபர்கள் நேற்று நுவரெலியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து டிசம்பர் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 09
மாத்தளை, நாவுல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போகஸ் பொபெல்ல பிரதேசத்தில் காட்டு யானை தாக்கியதில் 53 வயதான நபரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுவிட்டு மீண்டும் வீடு நோக்கி திரும்பிக்கொண்டிருந்த போதே, காட்டு யானை தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பாக நாவுல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# சதொச ஊடாக விற்பனை செய்யப்படும் தேங்காய்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 09
சதொச ஊடாக விற்பனை செய்யப்படும் தேங்காய்களின் எண்ணிக்கை நாளை முதல் இரண்டு இலட்சமாக அதிகரிக்கப்படும் என வர்த்தக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்குச் சொந்தமான தென்னந்தோப்புக்களிலுள்ள தேங்காய்கள் சதொச ஊடாக விற்பனை செய்யப்படுவதாகவும், கொழும்பு உள்ளிட்ட நகர்ப்புறங்களில் உள்ளவர்கள் சதொச நிறுவனத்திடமிருந்து தேங்காய்களை கொள்வனவு செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இரு வேறு பகுதிகளில் சடலங்கள் மீட்பு!

கொழும்பு, டிசெ. 09
நாட்டின் இரு வேறு பகுதிகளில் மர்மமான முறையில் உயிரிழந்த இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அவிசாவளை-வேகாலை பிரதான வீதியின் அரந்தர கெந்த பிரதேசத்திற்கு அருகில் உள்ள கால்வாய் ஒன்றிலிருந்து சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட நபர் 55 வயதான, உடுகம பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வரகாபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துல்ஹிரிய பிரதேசத்தில் வீடொன்றில் இருந்து நபரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

64 வயதான, துல்ஹிரிய பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (அ)

# மின் கட்டண திருத்த முன்மொழிவு விரைவில் மீளாய்வு செய்யப்படும

கொழும்பு, டிசெ. 09
இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மின்சாரக் கட்டண திருத்த முன்மொழிவு தொடர்பில் மீளாய்வு செய்யப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் கே.பி. எல் சந்த்ரலால் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் பொதுமக்களின் கருத்துக்களும் சேகரிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பிலான முன்மொழிவை , இலங்கை மின்சார சபை இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்ததுடன்

தற்போதுள்ள மின்சாரக் கட்டணம் , அடுத்த தின் முதல் 6 மாத காலப்பகுதிக்கும் தொடரும் என மின்சார சபையினால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் இதற்கு பல தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (அ)

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு உணவகங்களில் விசேட சோதனை

கொழும்பு, டிசெ. 09
நத்தார் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, உணவு மற்றும் பானங்களை விற்பனை செய்யும் நிலையங்களை பரிசோதிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்காக, சுமார் ஆயிரத்து 750 பேர் கொண்ட பொது சுகாதார பரிசோதகர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக, பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை டிசெம்பர் முதலாம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் 150இற்கும் மேற்பட்ட சுற்றிவளைப்புகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (அ)

# தேங்காய் விலை உச்சம்

கொழும்பு, டிசெ. 09
நாட்டில் தேங்காய் விலை திடீரென உயர்வடைந்துள்ளமையால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தையில் தேங்காய் ஒன்றின் விலை தற்போது 200 முதல் 230 ரூபா வரை விற்கப்படுவதுடன், சில பகுதிகளில் தேங்காய் தட்டுப்பாடு நிலவுவதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் தேங்காய் விற்பனைக்கு பிரபலமான கொடிகாமம் மற்றும் சாவகச்சேரி சந்தை வியாபாரிகளிடம் தேங்காயின் திடீர் விலை அதிகரிப்பு தொடர்பில் கேட்ட போது, அவர்கள் இவ்வாறு விளக்கமளித்திருந்தனர். (அ)

# புலம்பெயர் தொழிலாளர் பண அனுப்பலில் வீழ்ச்சி!

கொழும்பு, டிசெ. 09
இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டுக்கு பணம் அனுப்புவதில் சரிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்கள் கடந்த நவம்பர் மாதம் மொத்தமாக 530.1 மில்லியன் அமெரிக்க டொலர்களை நாட்டிற்கு அனுப்பியுள்ளனர்.

இந்த தொகை கடந்த ஒக்ரோபர் மாதம் 587.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டிருந்தது.

அதற்கு அமைவாக 2024 ஒக்ரோபர் மாதத்துடன் ஒப்பிடும் போது நவம்பர் மாதம் புலம்பெயர் தொழிலாளர்களின் பண அனுப்பலானது நவம்பர் மாதம் சரிவினை கண்டுள்ளது.

மேலும், 2023 நவம்பரில் பதிவுசெய்யப்பட்ட 537.3 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை ஒரு சிறிய வீழ்ச்சியையும் எடுத்துக் காட்டுகிறது.

இதேவேளை, 206,000 மில்லியன் ரூபாய் பெறுமதி யான திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறி வித்துள்ளது.

இந்த ஏல விற்பனை எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது.அதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 76,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 90,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏலத்தில் விற்பனை

# உப்பு உற்பத்தி வீழ்ச்சி குறித்து விசேட ஆய்வு!

கொழும்பு, டிசெ. 09
நாட்டில் உப்பு உற்பத்தி வீழ்ச்சி குறித்து ஆராய்ந்து வருவதாக வர்த்தகம், வணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த வருடமும் இந்த வருடமும் உப்பு உற்பத்தி குறைந்துள்ளதாகவும், இந்த விவகாரம் குறித்து உடனடியாக ஆய்வு செய்து தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

இந்த வருடமும் நாட்டில் உப்பு உற்பத்தி 40 வீதத்தால் குறைந் துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி தற்போது உள்நாட்டில் உற்பத்தி குறைவடைந்துள்ளதாகவும், இதற்கு தீர்வாக உப்பை இறக்குமதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உப்பு வரத்தக நிறுவனங்கள் அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

## மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு

கொழும்பு, டிசெ. 09

**அடுத்த ஆண்டு நாட்டின் சுகாதார கட்டமைப்பில் அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத் துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான சரியான கொள் முதல் நடைமுறையை பின்பற்றாததன் காரணமாக இந்த நிலைமை ஏற்படக்கூடும் என அதன் செயலாளர் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

வழமையாக புதிய வருடமொன்று ஆரம்பமாகும்போது, சுகாதார அமைச்சினால் குறித்த வருடத்துக்கான மருந்துகளுக்கான மதிப்பீட்டறிக்கை தயாரிக்கப்பட்டு கொள்வனவுக்கான வேண்டுகோள் விடுக்கப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், கடந்த அரசாங்கத்தின் பலவீனம் மற்றும் கடந்த காலங்களில் சுகாதாரத் துறையின் அதிகாரிகள் பலர் கைது செய்யப்பட்டமையினால் தற்போது, மருந்து ஒழுங்குபடுத்தல், கொள்வனவு மற்றும் விநியோகம் ஆகிய செயற்பாடுகளில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக, மருத்துவ விநியோகப்பிரிவின் தரவுகளுக்கமைய, அடுத்த ஆண்டில் பாரியளவில் மருந்து தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலை அவதானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இன்சுலின், புற்றுநோய்க்கான மருந்துகள் மற்றும் சில உயிர்காப்பு மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

எனவே, அரசாங்கம் உரிய கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றி பாரிய பற்றாக்குறைகள் ஏற்படுவதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பினது செயலாளர் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டின் சுகாதார கட்டமைப்பினுள் 300க்கும் அதிகமான மருந்துகளுக்கு முன்னதாக பற்றாக்குறை நிலவிய போதிலும் தற்போது அது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

(அ)

# அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜப்பான் அரசு உதவி!

கொழும்பு, டிசெ. 09

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஜப்பான் அரசாங்கம் சுமார் 300 மில்லியன் ரூபா பெறுமதியான உதவிப் பொருட்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இலங்கையில் உள்ள ஜப்பானிய தூதரகம் மற்றும் ஜய்கா நிறுவனத்தின் பங்கேற்புடன் வழங்கப்பட்ட உதவிப் பொருட்களை ஏற்றிவந்த விசேட சரக்கு விமானம் நேற்று முன் தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாகவும், அங்கு அவை இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் ஏற்பட்ட பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலர்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்பட உள்ளது.

இதனிடையே, மோசமான வானிலையால் பாதிக்கப்பட்ட வட மாகாண மக்களுக்கு இந்திய அரசும் ஏராளமான உதவிப் பொருட்களை வழங்கியுள்ளன.

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 09

ஹதரலியத்த பொலிஸ் பிரிவில் தேதுனுபிட்டிய பிரதேசத்தில் நேற்று மின்சாரம் தாக்கியதில் நபரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளதாக தெரியவருகிறது.

உயிரிழந்த நபர் கால்நடை வளர்ப்பு மேற்கொண்டு வந்தவர் எனவும், பண்ணையை சுத்தம் செய்யும் நடவடிகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தருணத்தில் மின்சாரம் தாக்கி உயிழந்ததாக கூறப்படுகிறது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹதரலியத்த பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ)

## சாரதிகளுக்கு மது கொடுத்து கொள்ளையில் ஈடுபட்ட நான்கு சந்தேக நபர்கள் சிக்கினர்!

கொழும்பு, டிசெ. 09

வாடகைக்கு பயணிப்பதாக தெரிவித்து, வாடகை வாகன சாரதிகளிடம் உள்ள தங்க நகைகளை சூட்சுமமான முறையில் கொள்ளையிட்டு வந்த நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த சந்தேகநபர்கள் முச்சக்கரவண்டியில் ஏறி சாரதிக்கு போதைப்பொருளை குடிக்கக் கொடுத்து இவ்வாறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் சுமார் 55 இலட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் தங்கப் பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகவும், அதிலிருந்து 41 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை செட்டியார் தெருவில் உள்ள தங்க விற்பனை நிலையமொன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் சுமார் 15 பொலிஸ் பிரிவுகளில் அடிக்கடி இந்த திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

(அ)

# நான்கு வலம்புரி சங்குகளை விற்க முயன்ற இருவர் கைது !

கொழும்பு, டிசெ. 09

புத்தளம் - மாதம்பே மற்றும் வென்னப்புவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரு வேறு பிரதேசங்களில் 4 வலம்புரி சங்குகளை விற்க முயன்ற சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மாதம்பே மற்றும் வென்னப்புவ பிரதேசங்களை சேர்ந்த 41 மற்றும் 42 வயதுடையவர்கள் ஆவர்.

இதன்படி மாதம்பை பகுதியில் விற்பனைக்கு தயாராக இருந்த சுமார் 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான வலம்புரி மற்றும் பல வகையான மட்டிகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து தடைசெய்யப்பட்ட வகையைச் சேர்ந்த மட்டிகளும், வலம்பரி சங்கு ஒன்றும், காணப்பட்டதாக இந்த சுற்றிவளைப்பில் ஈடுபட்ட வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து அவர் பயணித்ததாக கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வலம்புரி சங்கு உட்பட மட்டிகள், மோட்டார் சைக்கிள் என்பன மேலதிக விசாரணைகளுக்காக ஆனைவிழுந்தாவ வனவிலங்கு காரியாலய உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# வாகன இறக்குமதி குறித்து திகதி அறிவிக்கப்படவில்லை

கொழும்பு, டிசெ. 09

நாட்டில் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங்கமோ அல்லது எந்தவொரு அதிகாரியோ குறிப்பிட்ட திகதியை இதுவரை அறிவிக்கவில்லை என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும், டிசம்பர் இறுதி அல்லது எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் பஸ் மற்றும் லொறிகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்ற நம்பிக்கை நிலவுவதாகவும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது அதன் தலைவர் பிரசாத் மானகே குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்போதுள்ள வரி விதிமுறைகளுக்கு உட்பட்டு வாகன விலைகளை விளம்பரப்படுத்துவதையும், முன்கூட்டிய கொள்வனவு கட்டளைகளை செய்யுமாறு நுகர்வோரை வற்புறுத்துவதையும் பல நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன.

இது வாடிக்கையாளர்களை தவறாக வழிநடத்தும் முயற்சியாகவே தாம் பார்க்கின்றோம்.

இதுபோன்ற விடயங்கள், தற்போது வானங்களை வைத்திருப்போர், தேவையற்ற அச்சத்தில் குறைந்த விலையில் தங்கள் வாகனங்களை விற்பனை செய்ய தூண்டும் என்றும், அவசர முடிவுகளை எடுக்க உந்துதலை அளிக்கும்.

தம்மை பொறுத்தவரையில், வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் படிப்படியாகவே தளர்த்தப்படும், இதன்படி முதலில் பஸ்கள் மற்றும் லொறிகளும் அதைத் தொடர்ந்து வேன்கள் மற்றும் ஏனைய வணிக வாகனங்களுக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்.

எனினும் இந்த நடைமுறைகளுக்கான உரிய திகதி இன்னும் அறிவிக்கப்பட வில்லை.

வாகன இறக்குமதி சந்தை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், வாடிக்கையாளர் விரும்பிய வாகனத்தை போட்டி விலையில் கொள்வனவு செய்வதற்கான பல வாய்ப்புகள் கிடைக்கும்-என்றார்.

(அ)

## போதைப்பொருளுடன் மூவர் கைது!

கொழும்பு, டிசெ. 09

ஹெரோயின், ஐஸ் மற்றும் போதை மாத்திரைகள் உடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

33, 28 மற்றும் 26 வயதுகளுடைய பதுளை வினிதகம பகுதியை சேர்ந்த சந்தேக நபர்களே, இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

பதுளை விசேட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய குறித்த சுற்றிவளைப்பை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பதுளை புவக்கொடமுல்ல பகுதியில் சந்தேக நபர்கள் வாடகை அடிப்படையில் விடுதியொன்றை நடத்தி இதன் போது குறித்த போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவதாக கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய மேற்கொண்ட சுற்றி வளைப்பில் சந்தேக நபர்களிடம் இருந்து ஹெரோயின் போதைப் பொருள் 7130 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் 617 மில்லிகிராம் போதை மாத்திரைகள் 04 ஆகியன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்தவின் ஆலோசனையின் பேரில் பதுளை தலைமை பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவின் தலைமை அதிகாரி தலைமையில் பொலிஸ் பிரிவினர் விசாரணை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்சந்தேக நபர்களை விசாரணையின் பின்னர் பதுளை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மின் கட்டணத்தை 2/3 மடங்கு குறைப்பதாக சொன்ன ஜனாதிபதி அநுரவின் பதில் என்ன?

## தொழிற்சங்கள் கேள்வி

கொழும்பு, டிசெ. 09

**இலங்கை மின்சாரசபை 200 பில்லியன் ரூபா இலாபமீட்டியுள்ளது. அவ்வாறிருக்கையில் ஏன் மின் கட்டணத்தை குறைக்க முடியாது. தேர்தலுக்கு முன்னர் மின்சாரக் கட்டணத்தை மூன் றில் இரண்டு மடங்கால் குறைப் பதாகக் கூறிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தற்போது என்ன பதில் கூறப்போகின்றார் என தொழிற்சங்கள் கேள்வியெ ழுப்பியுள்ளன. அத்தோடு மின் சாரசபையின் முன்மொழி வுக்கும் கடும் எதிர்ப்பினையும் வெளியிட்டுள்ளன.**

தற்போது நடைமுறையிலுள்ள மின் கட்டணத்தை எதிர்வரும் 6 மாதங்களுக்கு அவ்வாறே பேண முடியும் என இலங்கை மின்சாரசபை, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்மொழிந்துள்ளது. இந்நிலையிலேயே மின்சாலையின் இந்த முன்மொழிவுக்கு தொழிற்சங்கங்கள் இவ்வாறு எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளன.

ஐக்கிய தொழிற்சங்க மற்றும் மின் பாவனையாளர்கள் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித இது தொடர்பில் தெரிவிக்கையில்-

இலங்கை மின்சாரசபை விலை சூத்திரத்தால் 200 பில்லியன் ரூபா இலாபமீட்டியுள்ளது. தற்போது நீர் தேக்கங்கள் நிரம்பி வழிந்தோடுகின்றன. குறைந்த செலவிலேயே மின் உற்பத்தி இடம்பெறுகிறது.

எனவே உடனடியாக மின்சாரக் கட்டணத்தைக் குறைக்குமாறு தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் வேட்பாளரான ரஞ்சன் ஜயலால் கூறினார். அது மாத்திரமின்றி டிசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் விசேட கொடுப்பனவும் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இவற்றை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் டிசம்பர் முதலாம் திகதியிலிருந்து 30 சதவீதத்தால் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதன் ஊடாக அரசாங்கத்துக்கு எந்த வகையிலும் நட்டம் ஏற்படப் போவதில்லை.

காரணம் தற்போது மின் அலகுகளுக்கு வரி அறவிடப்படுவதில்லை. ரஞ்சல் ஜனலால் கூறியதைப் போன்று மின்சாரசபை 200 பில்லியன் ரூபா இலாபமீட்டியுள்ளது.

எனவே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாவதற்கு முன்னரும், அதன் பின்னரும் கூறியதைப் போன்று 3000 ரூபாவாகக் காணப்படும் மின் கட்டணத்தை 1000 ரூபாவாகக் குறைக்க வேண்டும்.

மின் கட்டணத்தில் 35 சதவீத நிவாரணத்தை தற்போது மின்சாரசபையால் பாவனையாளர்களுக்கு வழங்க முடியும். தொழிற்சங்க தலைவராக இருந்த வசந்த சமரசிங்க இன்று வர்த்தக அமைச்சராகவுள்ளார்.

இவர் ஜனாதிபதியின் கூற்றை சவாலுக்குட்படுத்தும் வகையில், மூன்று ஆண்டுகளின் பின்னரே மின் கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைக்க முடியும் என்று கூறுகின்றார்.

வர்த்தக அமைச்சர் ஜனாதிபதியையும், மக்களையும் காட்டிக் கொடுக்கும் வகையில் கருத்துக்களை வெளியிடுவதை விடுத்து, இம்மாதம் முதலாம் திகதி முதல் மின் கட்டணத்தை குறைத்து மக்களுக்கு நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.

அகில இலங்கை சிறு தொழிற்சாலை உரிமையாளர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நிருக்ஷ குமார குறிப்பிடுகையில்-தேர்தல் பிரசார மேடைகளில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, 3000 ஆகக் காணப்படும் மின்சாரக் கட்டணத்தை 1000 ரூபாவாகக் குறைப்பதற்கு நீங்கள் விரும்பவில்லையா என்று அன்று மக்களிடம் கேட்டார்.

அதனை அரசாங்கத்துக்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம். மின் கட்டணத்தைக் குறைப்பதற்கான உங்களின் திட்டமிடல் எங்கே? தாத்தாவின் ஆடைகளையே பேரனும் அணிந்து கொண்டு பயணிக்கின்றார் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

உங்களுக்கு வாக்களித்த மக்களை மறந்து விட்டீர்களா என்று ரஞ்ஜன் ஜயலாலிடம் கேட்கின்றோம். மக்களுக்காகவும், மின்சார பாவனையாளர்களுக்காகவும் ஏன் குரல் கொடுக்காமலிருக்கின்றீர்கள்? மேற்கத்தேய ஆடையணிந்த அதிகாரிகளின் ஆலோசனைகளின் படி தீர்மானங்களை எடுத்தால், கோட்டாபய ராஜபக்ஷவின் கதியே உங்களுக்கும் ஏற்படும் என்பதை நினைவுபடுத்துகின்றோம்-என்றார்.

மின்சார பாவனையாளர்களின் சங்கத் தலைவர் ஏ.ஆர். அத்துல தெரிவிக்கையில்-

ஆட்சிக்கு வர முன்னர் மின்சாரக் கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைக்க முடியும் என்று தேசிய மக்கள் சக்தியினர் குறிப்பிட்டனர். ஆனால் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களையே இந்த திசைக்காட்டி அரசாங்கமும் முன்னெடுத்துச் செல்கிறது.

மின்கட்டணத்தை உடனடியாகக் குறைக்குமாறு அன்று தொழிற்சங்க தலைவர்களாக இருந்த வசந்த சமரசிங்க போன்றோர் வீதிக்கு இறங்கி போராடினர். இன்று அவர்கள் எங்கிருக்கின்றர்? ரஞ்ஜன் ஜயலால் போன்றவர்களை கண்டுபிடிக்கவும் கடினமாகவுள்ளது-என்றார். (அ)

# பாலின வன்முறைகள் ஒழிக்கப்பட வேண்டும்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, டிசெ. 09

சமூகத்தில், பாலின அடிப்படையிலான வன்முறைகள் ஒழிக்கப்பட வேண்டும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் சமத்துவத்தை மேம்படுத்த பாராளுமன்ற மகளிர் மன்றம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைத்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பாலின சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம் எனவும் தெரிவித்தார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் உலகத்திலும் இலங்கையிலும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

பொது இடங்களிலும், தங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களிடமும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளதாகப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைத்த மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், பாலின சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் முறைப்பாடுகளை ஆராய்ந்து துரிதமாக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பெண்கள் மீது இணையத்தினூடாக மேற்கொள்ளும் குற்றங்கள் தொடர்பில் கடினமாக நடவடிக்கை எடுப்பதாகவும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார். (அ)

# அரிசிக்கு தொடரும் தட்டுப்பாடு!

கொழும்பு, டிசெ. 09

நாட்டின் பல பகுதிகளில் அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர்.

அத்துடன், சதொச ஊடாக அரிசியை விநியோகிப்பதற்கான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும், அங்கு அரிசி மற்றும் தேங்காய் என்பன கையிருப்பில் இல்லை எனவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம், தங்களது மாதாந்த நுகர்வு பொருட்களுக்கான செலவில் தற்போது அதிகளவாகப் பங்கினை அரிசிக்காகச் செலவிட வேண்டியுள்ளதாகவும் நுகர்வோர் கவலை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் நாட்டரிசியை 230 ரூபாய் என்ற சில்லறை விலையில் விற்பனை செய்யுமாறு அரிசி விற்பனையாளர்களை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் எதிர்வரும் நாட்களில் அவதானம் செலுத்தி, இந்த விலையைப் பின்பற்றாத அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அரிசி விற்பனையாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஒரு கிலோ கிராம் வெள்ளை பச்சரிசியை 215 ரூபா என்ற மொத்த விற்பனை விலையிலும், 220 ரூபாய் என்ற சில்லறை விற்பனை விலையிலும், விற்பனை செய்யுமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். (அ)

# உள்ளூராட்சித் தேர்தலில் சுதந்திரக் கட்சி கதிரை சின்னத்தில் களமிறங்க தீர்மானம்

கொழும்பு, டிசெ. 09

வடக்கு, கிழக்கு உட்பட சகல தொகுதிகளிலும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் சுதந்திர கட்சி தலைமையிலான கூட்டணியில் கதிரை சின்னத்தில் போட்டியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 2025 ஜனவரி முதலாம் திகதி முதல் கட்சியின் மறுசீரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுதந்திர கட்சியின் பொருலாளர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை இரவு கூடிய சுதந்திர கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் வினவியபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுச் சபை கூட்டமும், சுதந்திர கட்சியின் மத்திய குழு கூட்டமும் இடம்பெற்றது.

இதன் போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட 341 தொகுதிகளிலும் போட்டியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவொன்றும், மறுசீரமைப்பு குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. 2025 ஜனவரி முதலாம் திகதி முதல் கட்சியின் மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பமாகும்.

அத்தோடு சுதந்திர கட்சியை தலைமையாகக் கொண்ட கூட்டணியொன்றை அமைப்பது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

கூட்டணி தொடர்பில் சில தரப்புக்களுடன் பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சுதந்திர கட்சியின் உப தலைவர் என்ற ரீதியில் சாமர சம்பத் தசநாயக்க பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்.

கதிரை சின்னத்திலேயே இம்முறை தேர்தலில் களமிறங்குவோம். எமது கூட்டணி சார்பில் இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு 25 சதவீத பிரதிநிதித்துவம் வழங்கப்படும்.

சுதந்திர கட்சியின் சார்பில் தேசிய பட்டியல் ஆசன மொன்று வழங்கப்பட வேண்டும் என்பதை புதிய ஜனநாயக முன்னணியிடம் வலியுறுத்தியிருக்கின்றோம். விரைவில் இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்று நம்புகின்றோம்-என்றார். (அ)

# குறுகிய காலத்தில் 8,500 மில்லியன் டொலர் சுற்றுலா வருமானத்தை ஈட்ட அரசு திட்டம்!

கொழும்பு, டிசெ. 09

குறுகிய காலத்தில் 8,500 மில்லியன் டொலர் சுற்றுலா வருமானத்தை ஈட்டுவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சுற்றுலா வலயங்களில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் சுற்றுலா விடுதிகளின் உரிமையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கிளீன் ஸ்ரீலங்கா என்ற பெயரில் இலங்கையை மாற்றியமைக்கும் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்காக ஜனாதிபதி செயலணியொன்றும் பெயரிடப்பட்டுள்ளதுடன், அதன் பணிகள் தற்போது ஆரம்ப கட்டத்தில் உள்ளன.

குறுகிய காலத்தில் 40 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைத்து, அதனூடாக 8,500 மில்லியன் அமெரிக்க டொலரை வருமானமாக ஈட்டுவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

எனவே, 2025 ஆம் ஆண்டு வணிக ரீதியில் சுற்றுலாத்துறைக்கு ஒரு முக்கிய ஆண்டாகும்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையைத் துரிதப்படுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேநேரம், சுற்றுலா வலயங்களின் சுகாதார தேவை தொடர்பில் அரசாங்கம் அதிக அவதானம் செலுத்தியுள்ளதுடன், அதற்குத் தனியார் துறையின் பங்களிப்பையும் எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*6 மத்ரஸா மாணவர்கள் மரணம்*

# மாவடிப்பள்ளி பாலத்தில் தடுப்பு தூண்கள் அமைப்பு



**காரைதீவு, டிசெ. 09**

**வெள்ள அனர்த்தம் ஏற்பட்டு அம்பாறை மாவடிப்பள்ளி பாலத்தில் 6 மத்ரஸா மாணவர்கள் உட்பட 8 பேர் உயிரிழந்த சம்பவத்தின் எதிரொலியாக அப்பகுதி வீதியின் மருங்கில் தடுப்புச் சுவர் போன்ற தூண்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.**

குறித்த தூண்கள் அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிப் பள்ளி சின்னப்பாலம் அருகே உழவி யந்திரம் விபத்துக்குள்ளாகி விடுமுறைக்கு வீடு திரும்பிக் கொண்டிருந்த மத்ரஸா மாணவர்கள் உள்ளிட்ட பலர் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்த சம்பவம் இடம்பெற்ற வீதிகளில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

நேற்று விரைவாக குறித்த தூண்கள் நிர்மாணிக்கப்பட்டு பூரணப்படுத்தும் செயல் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இத்திட்டத்துக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் உட்பட ஏனைய தரப்பினரும் ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றனர்.

மேலும் எதிர்காலத்தில் இப்பகுதியில் ஏற்படும் வெள்ள நிலையின் அளவீட்டை இலகுவாக கணிப்பீடு செய்வதற்காகவும் அவ்வழியாக பயணம் செய்யும் பொதுமக்கள் வாகனங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் இத்தூண்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

சுமார் 6 அடிக்கும் அதிகமான அளவீட்டுடன் இத்தூண்கள் கொங்கிறீட் கற்களை கொண்டு தடுப்புச்சுவர் போன்று அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீண்டும் பல தடவைகள் மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப் படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

## மீட்பு பணியாளர்கள் கௌரவமளிப்பு

சம்மாந்துறை, டிசெ. 09

கடந்த மாத இறுதியில் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் சிக்குண்ட 13 பேரை மீட் கும் பணியில் களப் பணியாற் றிய மீட்புப் பணியாளர்களை பாராட்டி நன்றி கூறும் நிகழ்வு சம்மாந்துறை பள்ளிவாசல்கள் நம்பிக்கையாளர்கள் சபையின் ஏற்பாட்டில் சம்மாந்துறை திரா ஸதுல் இஸ்லாமிய்யா மகளிர் அரபுக் கல்லூரியில் நடைபெற் றது.



வெள்ள அனர்த்தத்தின் போது சிக்குண்டு மரணித்த ஜனாஸாக்களை கரை சேர்ப்பதிலும், காணாமல் போனவர்களை தேடிக் கண்டுபிடிப்பதிலும், அவர்களுக்குரிய மார்க்கக் கடமைகளை செய்து நல்லடக் கம் செய்வதிலும் மனித நேயத்துடன் செயல்பட்ட மாளிகைக் காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு மற்றும் அவர்களுக்கு பக்கபலமாக உழைத்த சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை, காரைதீவு இராவணா அமைப்பு, கல்முனை மட்டுப்படுத்தப்பட்ட ஆழ்கடல் மீனவ சுழியோடிகள் நீரியல்வள கூட்டுறவு சங்கத்தினர், ஊடகவியலாளர்கள் ஆகியோரை சம்மாந்துறை பள்ளிவாசல்கள் நம்பிக்கையாளர்கள் சபையுடன் இணைந்து அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை சம்மாந்துறை கிளை, மஜ்லிஸ் அஸ்-சூரா உள்ளடங்கலாக சம்மாந்துறை பொது நிறுவனங்கள் கூடி கௌரவித்தன.

வவுனியா முன்னாள் அரசாங்க அதிபரும், சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை தலைவருமான ஐ.எம்.ஹனீபா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உலமாக்கள், சம்மாந்துறை பள்ளிவாசல்கள்களின் நம்பிக்கையாளர்கள், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை சம்மாந்துறை கிளை தலைவர் உட்பட நிர்வாகிகள், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை சாய்ந்தமருது- மாளிகைக்காடு கிளை தலைவர் உட்பட நிர்வாகிகள், மஜ்லிஸ் அஸ்-சூரா தலைவர் உட்பட நிர்வாகிகள், ஊர் பிரமுகர்கள், தனவந்தர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

## நிந்தவூர் மாட்டுப்பள்ளை பாலம் ஊடாக கனரக வாகனங்களும் செல்ல அனுமதி



நிந்தவூர், டிசெ. 09

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் நிந்தவூர் பிரதான வீதியிலிருந்த மாட்டுப்பள்ளை பாலம் உடைந்தது. இதனால், போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்ததுடன், பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை சந்தித்து வந்தனர்.

இந்த நிலையில், கடந்த அங்கு சென்ற வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரி. பாஸ்கரனின் அறிவுறுத்தலுக்கமைய, குறித்த பாலத்தை புனரமைக்கும் பணிகள் நடைபெற்றன.

இதனை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம பார்வையிட்டார்.

இதன்போது, இப்பாலத்தின் ஊடாக கடந்த ஒரு வாரமாக முன்னெடுக்கப்பட்ட போக்குவரத்து முறைகள் பற்றி மாகாணப் பணிப்பாளரால் அரசாங்க அதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்ததுடன், கனரக வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்த விடயத்தையும் சுட்டிக்காட்டினார்.

தற்பொழுது மாற்று வழிப் பாதை பாலமாக (இரும்பு பாலம்) அமைக்கப்பட்டு, இன்று முதல் சீரான போக்குவரத்து இடம்பெறவுள்ளதாகவும்,

கடந்த வாரங்களாக கனரக வாகனங்கள் செல்வதற்கு விதிக்கப்பட்ட தடை இன்று முதல் நீக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் கனரக வாகனங்களான பேருந்து, லொறி, டிப்பர் உள்ளிட்ட வாகனங்கள் இப்பாலத்தினூடாக பயணிக்க முடியும் எனவும் மாகாண பணிப்பாளர் எம். பி. அலியார் தெரிவித்தார்.

அத்தோடு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் இப்பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கு இடம்பெற்ற பிரதேசங்களை நேரில் சென்று பார்வையிட்டதுடன், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒலுவில்களியோடை பாலத்தை அண்டிய பிரதேசங்களையும் பார்வையிட்டார். மேலும், ஒலுவில் களியோடைப் பாலத்தின் கீழ் பகுதிகளில் தேங்கிக் கிடக்கும் மண்ணால் ஏற்படும் பாதிப்புகளையும் நேரில் சென்று பார்வையிட்டார்.


இதன்போது, பிரதம பொறியியலாளர் ரி. சிவசுப்ரமணியம், கல்முனை நிறைவேற்றுப் பொறியியலாளர் இஷட். ஏ. எம். அஸ்மிர் உள்ளிட்ட வீதி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (எ)

# பொதுப்பணிக்கு என்னையும் இணைத்துக் கொள்ளுங்கள்

**இராணுவ கட்டளை தளபதி களப்பத்தி கோரிக்கை**

நிந்தவூர், டிசெ. 09

பொதுப்பணிக்காக என்னையும் இணைத்துக் கொள்ளுங்கள் என்று இலங்கை இராணுவத்தின் 24ஆம் படைப்பிரிவின் 16ஆவது கட்டளைத் தளபதியாக பொறுப்பேற்றுள்ள மேஜர் ஜெனரல் எச் சீ. எல். களப்பத்தி கோரிக்கை விடுத்துள்ளார்.



நிந்தவூர் பிரதேச இளைஞர் தன்னார்வ அணியின் உறுப்பினர்களுடன் நடைபெற்ற சினேகபூர்வ சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அம்பாறை - மல்வத்தையில் அமைந்துள்ள படைத் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதில் அவர் மேலும் தெரிவிக்கையில், அம்பாறை மாவட்டம் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் மாவட்டமாகும். இங்கு வாழும் மக்களின் சகல பிரச்னைகளிலும் பொறுப்பு வாய்ந்த முறையில் நானும் பங்கெடுக்கத் தயாராக இருக்கின்றேன். பொதுப்பிரச்னைகளின் போது பொதுமக்கள் என்னை அணுக வேண்டும் என்று நான் எதிர் பார்க்கின்றேன்.

24 மணிநேரமும் மக்கள் பணி செய்யவே தான் பணிக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக அனர்த்தங்கள் இடம்பெறும்போது தானும், தனது படையினரும் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், தான் கடமையேற்ற முதல் நாளே அம்பாறை மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரடி கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டதாகவும், அது தொடர்பான எதிர்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விரைந்து செயல்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் தன்னார்வ அணியின் பிரதான செயல்பாட்டாளர் எஸ். எல். எம். நாஸிரூன், மௌலவி ஏ.பி.எம். ஷிம்லி மற்றும் வஸீம் சஜ்ஜாத் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

# உலருணவு பொருட்கள் வழங்கல்

நாவிதன்வெளி, டிசெ. 09

அம்பாறை நாவிதன்வெளி பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கும் நிகழ்வு நாவிதன்வெளி நளீர் பௌண்டேஷனின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினரும் நளீர் பௌண்டேஷன் நிறுவனருமான எம்.ஏ. நளீர் தலைமையில் நடைபெற்றது.



மேலும், அம்பாறை நாவிதன்வெளி பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சிரியா தலைநகர் டமாஸ்கஸ் கிளர்ச்சிப் படையினர் வசம்!

## ஜனாதிபதி தப்பிச்சென்ற விமானம் மாயம்!

டமாஸ்கஸ், டிசெ. 09

**சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ்ஸை கிளர்ச்சிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.இந்த நிலையில், ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத் தப்பிச் சென்ற விமானம் மாயமாகியுள் ளதால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.**



சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் -ஆசாத் தலைமையிலான அரசு நடந்து வருகிறது. எனினும், அந்த நாட்டில் 2011ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. இதில், 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப் பட்டனர் என ஐ. நா. தெரிவித்துள்ளது. இந்த எண்ணிக்கையை விட உயிரிழப்பு 2 மடங்கு அதிகம் (6 இலட்சம்) என்று சிரியாவின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சில ஆண்டுகளாக பெரிய ளவில் வன்முறை எதுவும் ஏற்படாத நிலையில், கடந்த வாரம் மீண்டும் கிளர்ச்சி வெடித்தது. ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத் தலைமையிலான அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் போரில் ஈடுபட்டு வருகின்றனர். இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட நிலையில் இந்த கிளர்ச்சி வெடித்துள்ளது.

சிரியாவில் உள்ள அலெப்போ மற்றும் ஹமா பகுதிகளை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர். அவர்கள் ஹோம்ஸ் நகர் நோக்கி முன்னேறி வருகின்றனர். இதனால், ஆயிரக்கணக்கான மக்கள் அப்பகுதியில் இருந்து தப்பியோடி வருகின்றனர். இந்த நகரை கைப்பற்றினால், கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கும் எனக் கூறப்படுகிறது.

இந்தச் சூழலில், சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நகரை சுற்றிலும் குவிக்கப்பட்டிருந்த அரசு படையினர் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கிளர்ச்சியாளர்கள் தலைநகரை கைப்பற்றியதால் ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத் டமாஸ்கஸை விட்டு வெளியேறினார். இதனைத்தொடர்ந்து தலைநகர் டமாஸ்கஸ் எல்லைப் பகுதியில் பஷார் அல்-ஆசாத்தின் தந்தை சிலையை கிளர்ச்சியாளர்கள் உடைத்தனர். மேலும் டமாஸ்கஸில் முக்கிய சிறையிலிருந்து கைதிகளை கிளர்ச்சியாளர்கள் விடுவித்துள்ளனர்.

இதுதொடர்பில் கிளர்ச்சியாளர்கள் அமைப்பின் மூத்த தளபதி ஹசன் அப்துல் கானி தனது வட்ஸ்-அப் பதிவில், "டமாஸ்கஸ் நகரத்தை பஷர் அல்-ஆசாத் திடமிருந்து விடுவித்ததாக நாங்கள் அறிவிக்கிறோம். உலகம் முழுவதும் இடம்பெயர்ந்த மக்களே, சுதந்திர சிரியா உங்களுக்காக காத்திருக்கிறது" என்று தெரிவித்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் சிரியாவின் ஜனாதிபதி பஷர் அல்-ஆசாத் தப்பிச் சென்ற விமானம் மாயமாகியுள்ளதால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. ரஷ்யா உள்ளிட்ட சில நாடுகள், பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் சிரியா செல்வது என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது எனக் கூறி வருகிறது. இதனால், மத்திய கிழக்கில் பதற்ற நிலை உருவாகியுள்ளது. (எ)

# இஸ்கான் மையத்துக்கு விஷமிகள் தீ வைப்பு

## சிலைகள் எரிந்து நாசம்

டாக்கா, டிசெ. 09

பங்களாதேஷில் அமைந்துள்ள இஸ்கான் மையம் தீ வைத்து எரிக்கப்பட்டது. அந்தக் கோவிலில் இருந்த தெய்வ சிலைகள் தீயில் எரிந்து நாசமாகின.

பங்களாதேஷ் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா கடந்த ஒகஸ்ட் 5ஆம் திகதி, பதவி விலகியதில் இருந்து அங்குள்ள இந்துக்களுக்கு எதிராகத் தொடர் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.



தாக்குதல் குறித்து இஸ்கான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ராதாரமன் தாஸ் தெரிவித்தவை வரு மாறு, "பங்களாதேஷ் தலைநகர் டாக்காவின் நம்ஹட்டா பகுதியில் இஸ்கான் மையம் அமைந்துள்ளது. இந்த மையம் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது. அந்த வளாகத்தில் இருந்த கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சிறீ சிறீ லஷ்மி நாராயண் உள்ளிட்ட சிலைகள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன. இந்த தீ வைப்பில் கோவில் முழுவதும் எரிந்து நாசமாகியுள்ளது.

சனிக்கிழமை அதிகாலை 2 மணி முதல் 3 மணிக்குள் இந்தக் கோவிலுக்குள் நுழைந்த மர்ம நபர்கள் தீ வைத்துள்ளனர்.

இதுதொடர்பில் பங்களாதேஷ் இடைக்கால அரசிடம் இஸ்கான் அமைப்பு சார்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளை பொலிஸாரும், அரசு அதிகாரிகளும் எடுக்கவில்லை என்று அவர் மேலும் கூறினார். (எ)

# ஜனாதிபதியை பதவிநீக்கும் தீர்மானம் தோல்வி

சியோல், டிசெ. 09

தென் கொரிய ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்யும் தீர்மானம் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது.

ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்யும் தீர்மானத்தை அந்த நாட்டின் எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தன. இந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது. தென் கொரியாவின் ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்ய பாராளுமன்றத்தில் 3இல் இரண்டு பங்கு ஆதரவும், குறைந்தபட்சம் 6 அரசியலமைப்பு நீதிமன்ற நீதிபதிகளின் ஆதரவும் தேவை. இந்த சூழலில், ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்யும் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை ஆளுங்கட்சி எம்.பிக்கள் புறக்கணித்தனர்.

இதனால் தென் கொரிய ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்யும் தீர்மானம் பாராளுமன்றத்தில் தோல்வியடைந்தது. அதே சமயம், பொதுமக்களின் போராட்டம் இனி வலுவடையக் கூடும் என எதிர்பார்க்கப்படுவதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. முன்னதாக, தென் கொரிய ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்யும் தீர்மானத்துக்கு பெரும்பாலான மக்கள் ஆதரவு தெரிவித்திருப்பதாக கருத்துக் கணிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (எ)

# ரஷ்யாவில் அதிநவீன முறையில் தயாரிக்கப்பட்ட போர்க் கப்பல்

## இந்திய கடற்படையில் இன்று இணைவு



புதுடில்லி, டிசெ. 09

ரஷ்யாவில் அதிநவீன முறையில் தயாரிக்கப்பட்ட ஐ. என். எஸ். துஷில் போர்க் கப்பல் இந்திய கடற்படையில் இன்று இணைக்கப்படுகிறது.

இந்திய கடற்படையில் தல்வார், தேக் மற்றும் கிர்விக் போர்க் கப்பல்கள் பயன்பாட்டில் உள்ளன. இந்த நிலையில், கிர்விக் - 3 போர்க் கப்பலின் மேம்படுத்தப்பட்ட வடிவமாக 'துஷில்' போர்க் கப்பல் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் கடந்த 2016ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டது.

ரஷ்யாவின் ஜே. எஸ். சி. ரோசோ போரோன் எக்ஸ்போர்ட் மற்றும் இந்திய கடற்படை, இந்திய அரசுடன் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆனால், குறிப்பிட்ட காலத்துக்குள் துஷில் போர்க் கப்பல் கட்டுமானம் முடியவில்லை. இந்த நிலையில், அந்த போர்க் கப்பல் கட்டுமானம் முடிந்து தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இக்கப்பலை இந்திய கடற்படையில் இணைக்கும் நிகழ்ச்சி, ரஷ்யாவின் கலினின் கிராட் பகுதியில் இன்று நடைபெறுகிறது. இதில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்கிறார். இந்த கப்பல் பயன்பாட்டுக்கு வருவதால், இந்திய கடற்படையின் பலம் மேலும் அதிகரிக்கிறது.

துஷில் என்றால் பாதுகாப்புக் கவசம் என்று பொருள். இந்த போர்க் கப்பல் 125 மீற்றர் நீளம் கொண்டது. 3,900 தொன் எடையுடையது. இந்தக் கப்பலில் இந்திய, ரஷ்ய தொழில்நுட்பங்களுடன் கொண்ட தாக்குதல் கருவிகள் வைக்கப்பட்டுள்ளன.

தரையில் இருந்து வானத்தில் ஏவும் ஏவு கணைகள், தரையில் இருந்து தரையில் உள்ள இலக்கை தாக்கும் ஏவுகணைகள், மற்ற அதிந வீன போர் ஆயுதங்கள் இக்கப் பலில் இடம்பெற்றுள்ளன. (எ)

# ஐக்கிய அரபு அமீரகத்தில் மழை வேண்டி பிரார்த்தனை

அபுதாபி, டிசெ. 09

ஐக்கிய அரபு அமீரகத்தில் மழை வேண்டி ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் மக்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் மழை பெய்ய வேண்டி பொது மக்கள் இறைவனிடம் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும் என்று ஜனாதிபதி ஷேக் முகமது பின் சையது வலியுறுத்தினார். அமீரகத்துக்கு மழையும், இரக்கமும் அளித்து ஆசீர்வதிக்க வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொள்ளுங்கள் என்றும் அவர் கூறினார்.

ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த சலாத் அல் இஸ்திஸ்கா என்ற சடங்கு முக்கியத்துவம் ஆகியவற்றுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் இமாம்கள் மற்றும் வழிபாட்டாளர்கள் கைகளை உயர்த்தி இறைவழிபாட்டில் ஈடுபட்டனர். (எ)

# இந்தியா கூட்டணிக்கு தலைமையேற்க தயார்

## மம்தா பானர்ஜி அறிவிப்பு

கொல்கத்தா, டிசெ. 09

இந்தியா கூட்டணிக்கு தலைமையேற்கத் தயார் என்று மேற்கு வங்க முதலமைச்சரும் திரிணமூல் காங்கிரஸ் தலைவியுமான மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு, "நான் இந்தியா கூட்டணியை உருவாக்கினேன். ஆனால், அவர்களால் (எதிர்க்கட்சித் தலைவர்கள்) அதை ஒன்றாக வைத்திருக்க முடியவில்லை. நான் என்ன செய்வது? நான் இந்தியா கூட்டணிக்குத் தலைமை தாங்கவில்லை. கூட்டணியின் தலைவர்கள் அனைவரும் ஒன்றாக இருப்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் என்னைப் பொருட்படுத்துவதே இல்லை. ஆனால், நான் அனைத்து தேசிய மற்றும் மாநிலக் கட்சிகளுடனும் சிறந்த உறவைப் பேணி வருகிறேன்.

வாய்ப்பு கிடைத்தால் இந்தியா கூட்டணியின் சுமூகமான செயல்பாட்டை உறுதி செய்வேன். இந்தியா கூட்டணிக்குத் தலைமையேற்கத் தயார். நான் மேற்கு வங்கத்துக்கு வெளியே செல்ல விரும்பவில்லை, ஆனால், நான் மேற்கு வங்கத்தில் இருந்தே கூட்டணியை இயக்க முடியும்"- என்றார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்து விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா அபார வெற்றி

## பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடர் சமநிலை

அடிலெய்ட், டிசெ. 09

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.


அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி பார்டர் - கவாஸ்கர் கிண்ணத்துக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. பெர்த்தில் நடந்த முதலாவது டெஸ்டில் இந்திய அணி வெற்றி பெற்று 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. இந்த நிலையில் இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் பகல் - இரவு போட்டியாக அடிலெய்டில் நடைபெற்றது.

இதில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 44. 1 ஓவர்களில் 180 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக நிதிஷ் ரெட்டி 42 ஓட்டங்கள் அடித்தார். அவுஸ்திரேலிய அணி தரப்பில் மிட்செல் ஸ்டார்க் 6 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதைத்தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலிய அணி 87. 3 ஓவர்களில் 337 ஓட்டங்கள் சேர்த்தது. அதிகபட்சமாக ட்ராவிஸ் ஹெட் 140 ஓட்டங்கள் குவித்தார். இந்திய அணி தரப்பில் ஜஸ்பிரீத் பும்ரா, முகமது சிராஜ் தலா 4 விக்கெட்கள் கைப்பற்றினர்.

இதனையடுத்து 157 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸில் விளையாடிய இந்திய அணி 2ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 24 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 128 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்த நிலையில் 3ஆவது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து விளையாடிய இந்திய அணி ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே 175 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் அவுஸ்திரேலியா வெற்றி பெற வெறும் 19 ஓட்டங்கள் மட்டுமே இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.




இந்தியா தரப்பில் அதிகபட்சமாக நிதிஷ் ரெட்டி 42 ஓட்டங்கள் அடித்தார். அவுஸ்திரேலியா தரப்பில் கம்மின்ஸ் 5 விக்கெட்கள் கைப்பற்றி அசத்தினார்.

இதனையடுத்து எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 3. 2 ஓவர்களிலேயே விக்கெட் இழப்பின்றி 19 ஓட்டங்கள் அடித்து 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. 3ஆவது நாள் ஆட்டம் முடிவதற்குள்ளேயே இந்த போட்டி முடிவுக்கு வந்தது.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1 - 1 என்ற கணக்கில் சமநிலையை எட்டியுள்ளது. (எ)

# ஆஸி மகளிர் அணியும் வெற்றி

பிரிஸ்பேன், டிசெ. 09

இந்திய மகளிர் அணிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட் டில் அவுஸ்தி ரேலிய மக ளிர் அணி 122 ஓட்டங்கள் வித்தியா சத்தில் வெற்றி பெற்றது.



அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய மகளிர் கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலாவது ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி இந்திய பந்துவீச்சை அதிரடியாக எதிர்கொண்டது. லிட்ச்பீல்ட் (60 ஓட்டங்கள்), பெத் மூனி (56 ஓட்டங்கள்), ஜார்ஜியா வோல் (101 ஓட்டங்கள்), எல்லிஸ் பெர்ரி (105 ஓட்டங்கள்) அடித்து அசத்தினர்.

நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் அவுஸ்திரேலிய மகளிர் அணி 8 விக்கெட்களை இழந்து 371 ஓட்டங்கள் குவித்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக சைமா தாகோர் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.


இதனையடுத்து 372 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி விளையாடிய இந்திய மகளிர் அணியினர் 249 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து 122 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தனர். (எ)

5 இலட்சம் ஓட்டங்களை கடந்த முதல் அணி

# டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இங்கிலாந்து மாபெரும் சாதனை

வெலிங்டன், டிசெ. 09

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 5 இலட்சம் ஓட்டங்களை கடந்த முதல் அணியாக இங்கிலாந்து உலக சாதனை படைத்தது.



இங்கிலாந்து கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இரு அணிகளுக் கும் இடையிலான 2ஆவது போட்டி வெலிங்டனில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி மாபெரும் வரலாற்று சாதனையை படைத்துள்ளது.அதன் விவரம் வருமாறு,147 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 5 இலட்சம் டெஸ்ட் ஓட்டங் களை கடந்த முதல் அணி என்ற மாபெரும் சாதனையை இங்கிலாந்து படைத்துள்ளது. இங்கிலாந்து இதுவரை 1082 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளது.

இந்த சாதனை பட்டியலில் 4 இலட்சத்துக்கு மேற்பட்ட ஓட்டங்களுடன் அவுஸ்திரேலியா 2ஆவது இடத்திலும், 2 இலட்சத்துக்கு மேற்பட்ட ஓட்டங்களுடன் இந்தியா 3அவது இடத்திலும் உள்ளன. (எ)

# 323 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து இமாலய வெற்றி

வெலிங்டன், டிசெ. 09

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து 323 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட தொடரில் 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெலிங்டனில் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 280 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து. பின்னர் முதல் இன்னிங்ஸை தொடங்கிய நியூசிலாந்து அணி 34. 5 ஓவர்களில் 125 ஓட்டங்களுக்கு சுருண்டது. இங்கிலாந்து தரப்பில் கஸ் அட்கின்சன் மற்றும் பிரைடன் கார்ஸ் தலா 4 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 155 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

இந்த நிலையில் நேற்று 3ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 6 விக்கெட்களை இழந்து 427 ஓட்டங்கள் குவித்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதன் மூலம் நியூசிலாந்து வெற்றி பெற 582 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இங்கிலாந்து தரப்பில் ஜோ ரூட் 106 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பென் ஸ்டோக்ஸ் 49 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.



பின்னர் இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து, இங்கிலாந்து பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விரைவில் விக்கெட்களை இழந்து தடுமாறியது.

முடிவில் 54. 2 ஓவர்கள் தாக்குப்பிடித்த நியூசிலாந்து 259 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் 323 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற இங்கிலாந்து 3 போட்டிகள் கொண்ட தொடரை 2 - 0 என்ற கணக்கில் ஆரம்பத்திலேயே கைப்பற்றியுள்ளது.

இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக பென் ஸ்டோக்ஸ் 3 விக்கெட்களும், கிறிஸ் வோக்ஸ், பிரைடன் கார்ஸ் மற்றும் ஷோயப் பஷிர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். (எ)

# மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறியது ஆஸி இரண்டாவது இடத்தையும் இழந்தது இந்தியா

அடிலெய்ட், டிசெ. 09

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அபார வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா உலக டெஸ்ட் தரவரிசை பட்டியலில் மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறியது.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி பார்டர் - கவாஸ்கர் கிண்ணத்துக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் நேற்று நிறைவடைந்த இரண்டாவது போட்டியில் வெற்றி பெற்றதால் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் இந்தியாவை பின்னுக்குத் தள்ளி அவுஸ்திரேலியா மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது. 60. 71 புள்ளிகளுடன் அந்த அணி முதலிடத்தில் உள்ளது. இதேவேளை, 59. 26 புள்ளிகளுடன் தென்னாபிரிக்கா 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. 57. 29 புள்ளிகளுடன் இந்திய அணி 3ஆவது இடத்துக்கு சரிந்துள்ளது. (எ)

# லா லிகா உதைபந்தாட்டம் ரியல் மட்ரிட் அணி வெற்றி

மட்ரிட், டிசெ. 09

20 முன்னணி கிளப் அணிகள் இடையிலான லா லிகா உதைபந்தாட்ட தொடர் ஸ்பெயினில் நடந்து வருகிறது. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் முடிவில் புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தை பிடிக்கும் அணி சம்பியன் பட்டத்தை வெல்லும்.

இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஜிரோனா - ரியல் மட்ரிட் அணிகள் மோதின.பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடி ரியல் மட்ரிட் அணி ஆதிக்கம் செலுத்தியது. இதனால் ஆட்ட நேர முடிவில் 3 - 0 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் அணி வெற்றி பெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாவசிய...

குறைப்பதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம்.

நாட்டினுள் பொருட்களின் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்கள் முயற்சிக்கின்றார்கள். நாம் பேச்சுவார்த்தைகள் மூலம் அவற்றைத் தீர்த்துக் கொள்வதற்கு முயற்சிப்போம்.

மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாதவாறு சந்தையினுள் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாதவாறு இருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம்.

தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரச நிறுவனங்கள் ஊடாக தலையிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

குறிப்பாக சதொச மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை 25 சதவீதம் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம்.

பண்டிகைக் காலங்களில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது - என்றார். (அ)

## இலங்கை...

பிரிட்டன் முன்னெடுக்கவேண்டும்" என வலியுறுத்தப்பட்டிருந்தது.

அக்கடிதத்துக்குப் பதிலளித்து பிரிட்டனின் இந்தோ - பசுபிக் விவகார அமைச்சர் கத்ரின் வெஸ்ட் கடந்த 4 ஆம் திகதி பிரித்தானிய தமிழர் பேரவைக்கு பதில் கடிதமொன்றை அனுப்பிவைத்திருக்கிறார். அக்கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

இலங்கை தொடர்பில் நீங்கள் கடந்த ஜூலை மாதம் 5 ஆம் திகதி பிரதமருக்கு அனுப்பிவைத்த கடிதத்துக்கு இந்தோ - பசுபிக் விவகார அமைச்சர் என்ற ரீதியில் பதிலளிக்கிறேன்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் உள்ளடங்கலாக மனித உரிமைகளுடன் தொடர்புடைய பரந்துபட்ட கரிசனைகள் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் பிரிட்டன் தொடர்ச்சியாக இணைந்து செயற்பட்டுவருகிறது. செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கூட்டத்தொடரில் வெளியிட்ட அறிக்கையிலும் எமது கரிசனைகள் குறித்து தெளிவாக வெளிப்படுத்தியிருந்தோம்.

இலங்கை விவகாரத்தைப் பொறுத்தமட்டில் பிரிட்டன் அரசாங்கமானது ஏனைய இணையனுசரணை நாடுகளுடன் இணைந்து இலங்கையில் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தும் நோக்கில் கடந்த பல வருடகாலமாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை உள்ளடங்கலாக சர்வதேச மட்டத்தில் பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. கடந்த ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி பிரிட்டனின் தலைமையில் கொண்டுவரப்பட்ட 57/1 தீர்மானம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தில் சர்வதேசத்தின் பங்கேற்புடனான நிகழ்ச்சித்திட்டமொன்று தொடர்வதற்கு இத்தீர்மானம் வழிகோலியிருக்கிறது. மிகமுக்கியமாக இத்தீர்மானமானது இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டுவதற்கும், அவற்றைப் பேணுவதற்கும் அளிக்கப்பட்டிருந்த ஆணையைப் புதுப்பித்திருக்கிறது.

மேலும் தடைகளை விதிப்பது என்பது மிகமோசமான மனித உரிமை மீறல்களைக் கையாள்வதற்கான ஏனைய பல இராஜதந்திர உத்திகளில் ஒன்றாகும். எதிர்வருங்காலத்தில் தடை விதிக்கப்படக்கூடிய பதவிகள் குறித்த யூகங்களை வெளியிடுவதானது, அத்தடைகளால் ஏற்படக்கூடிய தாக்கங்களைக் குறைக்கும் என்பதால், அவ்விவரங்களை வெளியிடுவது பொருத்தமானதாக அமையாது என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## ஆவா...

அத்துடன், ரொறன்டோவில் கைதான குறித்த நபர் செய்த கொலை தொடர்பான விசாரணைகள் அடுத்த வருடம் மே மாதம் வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

## கம்பி...

காணப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக காணப்பட்டவர் மூன்று பிள்ளைகளின் தாயான விமலன் சிந்து என்கின்ற 42 வயதுடைய இளந்தாயார் ஆவர். இது தொடர்பான தீவிர விசாரணைகளை பருத்தித்துறை போலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## அரிசி...

உட்படுத்தப்பட்டதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பணிப்புரைக்கு அமைய எதிர்காலத்தில் அனைத்து அரிசி ஆலைகளின் தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அந்த அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரக்கோன் தெரிவித்தார். (அ)

## தேசிய...

சந்திப்பினையும் மேற்கொண்டிருந்தோம்.

இதன் போது தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகள் தொடர்பில் நாங்கள் வெளிப்படுத்தியிருந்தோம்.

அதில் முதலாவதாக தேசிய இனப்பிரச்னை தொடர்பான விடயத்தை நியாயமான அடிப்படையில் மிகவும் விரைவாக தீர்த்து வைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்தோம்.

அத்துடன் இராணுவத்தினராலும், குடியேறிகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற காணிகள் விடுவிப்பு விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

## கிழக்கு...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் நாளை முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை சில இடங்களில் மிதமான மழையும் சில இடங்களில் கனமழையும் கிடைக்கும் வாய்ப்புள்ளது. குறிப்பாக எதிர்வரும் 10, 11 மற்றும் 12ஆம் திகதிகளை உள்ளடக்கிய 72 மணித்தியாலங்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில இடங்களில் 150 மி.மீ. க்கு கூடுதலாக திரட்டிய மழைவீழ்ச்சி பதிவாக வாய்ப்புள்ளது.

நேற்று இரவு முதல் வடக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கு கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்ப்பது சிறந்தது.

இந்த காற்றமுழுத்த தாழ்வு நிலை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் வளிமண்டல சாரீரப்பதன் மாற்றம் காரணமாக நேற்று முதல் அடுத்த சில நாட்களுக்கு குளிரான வானிலை நிலவும்.

அதேவேளை எதிர்வரும் 14 ஆம் திகதி இந்தோனேசியாவின் பண்டா அச்சே மாநிலத்திற்கு வடக்கே காற்றமுழுத்த தாழ்வு நிலை ஒன்று உருவாகும். இது சிறிய அளவிலான புயலாக மாறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

இதுவும் ஆரம்பத்தில் மேற்கு, வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து பின்னர் வடக்கு வடமேற்கு திசை நோக்கி நகரும் வாய்ப்புள்ளது. தற்போதைய நிலையில் இதன் நகர்வுப் பாதையும், நகரும் திசையும் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படும் இடமும் அவசியம் கவனிக்கப்பட வேண்டியது. இது தொடர்பான மேலதிக விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் - என்றார். (அ)

# டெஸ்ட் கிரிக்கெட்டில் 8,000 ஓட்டங்களை கடந்த மத்தியூஸ்

கொழும்பு, டிசெ. 09

டெஸ்ட் கிரிக்கெட்டில் 8 ஆயிரம் ஓட்டங்களை எடுத்த மூன்றாவது இலங்கை வீரர் என்ற பெருமையை அஞ்சலோ மத்தியூஸ் பெற்றுள்ளார்.

முன்னாள் வீரர்களான குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜயவர்தன ஆகியோர் முதலாம், இரண்டாம் இடங்களில் உள்ளனர்.

இந்த நிலையில், 37 வயதான மத்தியூஸ், தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது, இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

அந்த வகையில் அஞ்சலோ மத்தியூஸ் 116 போட்டிகளில் 8 ஆயிரத்து 6 ஓட்டங்களை பெற்றுள்ளார். (அ)

# சுவிஸ் தூதரக அதிகாரிகளுடன் தமிழ் தேசியக் கட்சிகள் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 09

சுவிஸ் நாட்டு தூதரக அதிகாரிகள் இலங்கை தமிழரசுக் கட்சி உள்ளிட்ட ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினர். குறித்த சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

இதில் இலங்கையில் தேசிய இனப்பிரச்னையை தீர்ப்பது தொடர்பான கட்சி நிலைப்பாடு தொடர்பிலும், புதிய அரசாங்கத்துடன் நடைபெறக்கூடிய பேச்சு வார்த்தை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் சுவிஸ் நாட்டின் வெளிநாட்டு அலுவல் திணைக்களத்தின் உதவிச் செயலாளர், சமாதானம் மற்றும் மனித உரிமைகள் பிரிவின் தலைவர் ரிம் என்ரனைற், இலங்கைக்கான சுவிஸ் தூதரகர் ஸ்ரீ ஹேரால்ட், இலங்கைக்கான சுவிஸ் தூதரக மனித பாதுகாப்பிற்கான முதன்மை செயலாளர் ஜஸ்டின்பிறனைற், சுவிஸ் தூதரகத்தின் மொத்த தேசிய திட்ட அதிகாரி சுசந்தி கோபால கிருஷ்ணன், இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம், கட்சியின் பாராளுமன்ற குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அமைச்சர்களின் பங்களாக்களை வழங்குமாறு பல்வேறு தனியார் நிறுவனங்கள் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 09

அமைச்சர்களின் பங்களாக்களை தமது பாவனைக்காக வழங்குமாறு சுமார் 15 தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் ஏழு வெவ்வேறு அமைப்புகள், அமைச்சர்களின் பங்களாக்களை வாடகைக்குக் கோரியுள்ளன.

மேலும், அமைச்சர்களின் பங்களாக்களை தங்கள் பயன்பாட்டிற்கு தருமாறு மூன்று நீதிபதிகளும் கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த கோரிக்கைகள் அனைத்தும் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையே, சுற்றுலாத்துறையை மேம்படுத்த அமைச்சர் பங்களாக்களை பயன்படுத்திக்கொள்ளலாம் என அமைச்சின் சில அதிகாரிகள் அரசுக்கு பரிந்துரைத்துள்ளனர். (அ)

# மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 09

தென்கிழக்கு வங்காள விரிகுடாவின் ஆழ்கடல் பகுதியில் பல நாள் மீன்பிடி மற்றும் கடல் கப்பல்கள் செல்லும் போது அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடல் பகுதியில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த 24 மணி நேரத்தில் மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து இலங்கை- தமிழக கடற்கரை. அப்பால் தென்மேற்கு வங்காள விரிகுடா கடல் பகுதியை எதிர் வரும் 11ஆம் திகதி அடைய வாய்ப்பு உள்ளதாக அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அந்த கடற்பரப்புகளில் தற்காலிகமாக மணிக்கு 60 கிலோமீற்றருக்கும் அதிகமான வேகத்தில் காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்யக் கூடும் எனவும் அந்த கடற்பரப்புகள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. (அ)

## மார்ச்...

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

341 உள்ளூராட்சி சபைகளுக்கு 8 ஆயிரத்து 711 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக ஏற்கனவே கோரப்பட்ட வேட்பு மனுக்களின் அடிப்படையில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 80 ஆயிரத்து 672 பேர் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எல்பிட்டிய பிரதேச சபை தவிர ஏனைய 341 சபைகளுக்கும் தேர்தல் நடத்தப்படும். (அ)

## ஐக்கிய...

மற்றும் பானங்கள், உள்நாட்டு விமானங்கள், பாராசூட் மூலம் பொருட்களை இறக்குதல், மருத்துவ குழு போக்குவரத்து உள்ளிட்ட பலவிதமான பணிகளுக்கு தீவிரமாக பங்களிப்பு வழங்கும்.

இதற்கிடையில், மத்திய ஆபிரிக்க குடியரசில் அமைதி காக்கும் பணிகளுக்காக அனுப்பப்பட்ட விமானப்படை ஹெலிகொப்டர் படைப்பிரிவைச் சேர்ந்த 92 விமானப்படை பணியாளர்களும் சமீபத்தில் மத்திய ஆபிரிக்காவில் இருந்து இலங்கை திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 16ஆம் திகதி...

வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளார் எனவும், வர்த்தக சமூகத்தினருடனும் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோரும் ஜனாதிபதியுடன் டில்லி செல்லவுள்ளனர். மீனவர் பிரச்னை சம்பந்தமாகவும் இதன் போது கலந்துரையாடப்படவுள்ளது என அறியமுடிகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## பொலிஸார் திடீரென சோதனை பலருக்கு எதிராக வழக்கு பதிவு



வவுனியா, டிசெ. 09

வவுனியா நகரம் மற்றும் அதனையண்டிய பகுதிகளில் பொலிஸார் திடீரென சோதனை நடவடிக்கையை முன்னெடுத்ததுடன், டெங்கு நுளம்பு பெரும் வகையில் சூழலை வைத்திருந்த பலருக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்தனர்.

கடந்த சில நாட்களாக பெய்த மழை காரணமாக டெங்கு நோய் தாக்கம் அதிகரித்து வருகின்றது.

இதனையடுதது வவுனியா நகரம் மற்றும் நகரை யண்டிய பகுதிகளில் உள்ள வீடுகள், வர்த்தக நிலையங்கள், கல்வி நிலையங்கள் என்பனவற்றில் வவுனியா பொலிஸார் நேற்றுத் திடீரென சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதன்போது, ரயர்கள், சிரட்டைகள், வெற்றுப் போத்தல்கள் என்பன பல இடங்களில் காணப்பட்டதுடன், அவற்றில் நீர் தேங்கி நுளம்புக் குடம்பிகளும் இனங்காணப்பட்டன. அவ்வாறு இனங்காணப்பட்ட இடங்களின் வீட்டு உரிமையாளர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் ஆகியோருக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இதேவேளை, டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்து வருவதால் வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் தமது அயல் பகுதிகளை நுளம்புகள் பெருகாத வண்ணம் சுத்தமாக வைத்திருக்குமாறும் பொலிஸார் பொதுமக்களை அறிவுறுத்தினர். (எ)

## அரசு நிர்ணயித்துள்ள விலையில் அரிசி விற்பனை செய்ய முடியாது

### வியாபாரிகள் விசனம்

கொழும்பு, டிசெ. 09

அரசாங்கம் விதித்துள்ள புதிய அதிகபட்ச சில்லறை விலையின் கீழ் அரிசியை விற்பனை செய்ய முடியாது என வியாபாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

வர்த்தக,வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அரிசி வியாபாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன் தினம் சனிக்கிழமை கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன்போது அரிசிக்கான புதிய அதிகபட்ச சில்லறை விலையை அரசாங்கம் நிர்ணயித்தது.

இதன்படி, சந்தையில் நாடு, சம்பா மற்றும் சிவப்பு அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், கீரி சம்பாவின் விலையில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை.

நாடு அரிசி ஒரு கிலோ கிராமின் மொத்த விலை 225 ரூபாவாகவும் சில்லறை விலை 230 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டது.

வெள்ளை அரிசி ஒரு கிலோ கிராமின் மொத்த விலை 215 ரூபாவாகவும் சில்லறை விலை 220 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டது.

அத்துடன் இறக்குமதி செய்யப்படும் நாடு அரிசி ஒரு கிலோ கிராம் 220 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டதுடன் சம்பா அரிசியின் மொத்த விலை 235 ரூபாவாகவும் சில்லறை விலை 240 ரூபாவாவும் விலை நிர்ணயிக்கப்பட்டது.

மேலும் கீறி சம்பா அரிசி ஒரு கிலோ கிராமின் மொத்த விலை 255 ரூபாவாகவும் சில்லறை விலை 260 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டது.

இதேவேளை, சந்தையில் இன்னும் அரிசிக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும், புதிய அதிகபட்ச சில்லறை விலையில் அரிசியை விற்பனை செய்ய முடியாது எனவும் வியாபாரிகள் விசனம் வெளியிட்டுள்ளனர். (அ)

# மாகாண சபைத் தேர்தலை கால தாமதமின்றி நடத்துக!

### சுமந்திரன் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 09

**மாகாண சபைத் தேர்தலைக் கால தாமதமின்றி அரசாங்கம் நடத்தவேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.**



அடுத்த வருட இறுதி வரை காத்திருக்காமல், உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிந்த பிறகு, மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கு முன்னதாக மாகாண சபைகளை முழு அதிகாரத்துடன் இயங்கச் செய்வது முக்கியமானதாகும் எனவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாகாண சபை முறைமையை நீக்குவதற்கு எந்தவொரு தீர்மானத்தையும் தற்போதுவரை அரசாங்கம் எடுக்கவில்லை என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.

புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதற்கு மூன்று வருடங்கள் வரை செல்லும். எனவே, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற முறைமை தொடர்பில் தமது பரிந்துரைந்துகளை அனைவரும் முன்வைக்கலாம். புதிய அரசியலமைப்பு மக்களுடனான கலந்துரையாடலின் பின்னரே கொண்டுவரப்படும்.

இது தொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்துவதற்கு போதிய கால அவகாசம் உள்ளது.

எனவே, மாகாண சபை முறையை ஒழிப்பதற்கு அரசாங்கம் எந்தவொரு தீர்மானத்தை இது வரை எடுக்கவில்லை.

மாகாண சபை முறைமை புதிய அரசியலமைப்பில் தொடர்ந்தால் தற்போது இருக்கும் அதிகாரங்களுக்கு அப்பாலான அதிகாரங்கள் வழங்கப்படாது எனவும் தற்போதைய அதிகாரங்கள் குறைக்கப்படாது எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வவுனியாவில் நடைபாதை கடைகளை அகற்றுமாறு நகரசபை உத்தரவு!

### அகற்றாவிடில் நடவடிக்கை

வவுனியா,டிசெ.09

வவுனியா நகரில் பொதுப்போக்குவரத்துக்கு இடையூறான வகையில் காணப்படும் நடைபாதை வியாபார நிலையங்களை உடனடியாக அகற்றுமாறு வவுனியா நகரசபை செயலாளரால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இலுப்பையடிப் பகுதி மற்றும் சந்தைக்கு அண்மித்த பகுதிகள், வைத்தியசாலையை வீதி ஆகியவற்றில் வியாபாரத்தை முன்னெடுத்துவரும் நடைபாதை கடைகளை அகற்றுமாறே குறித்த அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னராக இவ்வியாபார நிலையங்களை அகற்றுமாறு கோரப்பட்டுள்ளதுடன் அந்த தினத்தில் அகற்றப்படாது விடின் அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கையினை நகர சபை முன்னெடுக்கும் என்று செயலாளரால் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தின்பிரதிகள் வடமாகாண ஆளு நர், மாகாண உள்ளூராட்சித் திணைக்களம், வவுனியா மாவட்ட செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, பொலிஸ் போக்குவரத்துப்பிரிவு ஆகிய திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரப்பகுதிகளில் உள்ள நடைபாதை வியாபாரநிலையங்களால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங் களை சந்தித்துவருகின்றனர். குறிப்பாக நடைபாதைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பிரதான வீதிகளினூடாக பயணம் செய்கின்றனர். இதனால் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாவதுடன், போக்குவரத்து நெருக்கடிநிலையும் ஏற்படுகின்றது.

இது தொடர்பாக வவுனியா நகரசபைக்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வந்தநிலையில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (10)

# அரிசி ஆலை மாபியாக்களால் நன்கு திட்டமிட்டே தட்டுப்பாடு!

### அஜித் பெரேரா குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 09

அரிசி ஆலை உரிமையாளர்களின் மாபியாக்களினால் திட்டமிட்டு நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அரிசி இறக்குமதி விவகாரத்திலும் பாரிய மோசடிக்கான திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. தேவைக்கு அதிகமான அரிசி இறக்குமதி செய்யப்படுவதால் அடுத்த அறுவடையின்போது விவசாயிகளுக்கு நியாயமான விலையில் நெல்லை விற்பனை செய்ய முடியாத அபாயம் காணப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனை தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்-

காலநிலையில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாகவே தேங்காய் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஆனால், அரிசி தட்டுப்பாடு, அரிசி ஆலை உரிமையாளர்களின் மாபியாக்களினால் ஏற்படுத்தப்பட்டவை ஆகும்.

இவர்கள் நெல் மற்றும் அரிசி என்பவற்றை மறைத்து வைத்திருக்கின்றனர். இவர்களால் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நெல் மற்றும் அரிசியின் அளவை அரசாங்கத்தால் இலகுவாக கண்டுபிடிக்க முடியும்.

சில அதிகாரிகள் இந்த அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அடிபணிந்துள்ளதால் அல்லது அவர்களால் அரசாங்கத்துக்கு தவறான தகவல் வழங்கப்படுவதன் காரணமாகவே அதனை அரசாங்கத்தால் கணிப்பிட முடியாதுள்ளது. அரிசி தட்டுப்பாட்டை அரசாங்கத்தால் முகாமைத்துவம் செய்ய முடியும். அதற்கான தீர்வும் காணப்படுகிறது.

அதேபோன்று வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுவதாகக் கூறப்படுவது சந்தேகத்துக்கிடமானதாக காணப்படுவதோடு ஊழல் மிக்கதாகவும் உள்ளது.

அரிசியை இறக்குமதி செய்வதற்கான பணம் இந்த பாரிய அரிசி ஆலை உரிமையாளர்களாலேயே வழங்கப்படவுள்ளது. அரிசியைப் பதுக்கி தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ள அவர்களாலேயே அரிசியை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது.

இதன் பின்புலத்தில் பாரதூரமான பின்விளைவு ஏற்படும். அடுத்த அறுவடையின்போது நாட்டினுள் தேவைக்கதிகமான அரிசி காணப்பட்டால், விவசாயிகளுக்கு நெல்லுக்கான நியாயமான விலை கிடைக்காது. விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்.

எனவே, நாட்டுக்கு தேவையான அரிசியின் அளவு எவ்வளவு? அதனை விநியோகிப்பதற்கான வழிமுறை என்ன? எந்த வகை அரிசி தேவையாக உள்ளது? உண்மையில் அரிசி பதுக்கப்பட்டுள்ளதா? பதுக்கப்படாவிட்டால் அரிசிக்கு என்ன ஆயிற்று? என்பன குறித்து தெளிவுபடுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அதனை விடுத்து அரசாங்கம் எதிர்க்கட்சியைப் போன்று செயற்படக்கூடாது. மின்சாரக் கட்டணத்தை 30 சதவீதத்தால் உடனடியாக குறைக்க வேண்டும் என்பதே தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியின் கோஷமாக இருந்தது. உடனடியாக என்ற அந்த சொல்லை தற்போது “இரண்டரை அல்லது மூன்று ஆண்டுகள்” என்று அர்த்தப்படுத்தியுள்ளனர். அரசாங்கம் மக்களை எந்தளவுக்கு ஏமாற்றியிருக்கிறது என்பது இதிலிருந்தே தெளிவாகிறது - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org